விலை ரூபா: 15.00

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதின்னான்கு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 பங்குனி 16 ஞாயிற்றுக்கிழமை (29.03.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 100

### எஞ்சிய மக்களையாவது காப்பாற்ற சர்வதேச சமூகம் முன்வரவேண்டும்

# வன்னிப் போர்க் களத்தில் 2 லட்சம் மக்கள் சிக்கியுள்ளனர்

## நேரில் சென்ற ஐரோ. மனித நேயத் தலைவர் தகவல்

(புதுடில்லி)

இலங்கையில் போர் நடைபெறும் வன்னியில் 2 லட்சம் பேர் சிக்கியிருப்பதாக ஐரோப்பிய மனித நேய ஆணையத் தலைவர் எஸ்கோ தெரிவித்தார். அரசிடம் தஞ்சம் அடைந்து நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்கள் அடிப்படை வசதிகள் இல்லாமல் தவித்து வருவதாக அங்கு நேரில் சென்று பார்வையிட்ட அவர் தெரிவித்துள்ளார். (14ஆம் பக்கம் பார்க்க)



புதுமாத்தளனில் நேற்று இடம்பெற்ற எறிகணைத் தாக்குதலில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உள்ளவர்கள்.

## நேற்றும் 450 பேர் புல்மோட்டைக்குச் சென்றனர்

(கொழும்பு)

புதுமாத்தளன் பிரதேசத்திலிருந்து காயமடைந்த நோயாளர்கள் மற்றும் அவர்களது உறவினர்கள் என 450 இற்கும் அதிகமானவர்களை ஏற்றிக் கொண்டு கிறின் ஓசியானிக் கப்பல் நேற்று புல்மோட்டை சென்றுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வழித்துணையுடன் (14ஆம் பக்கம் பார்க்க)



## நோர்வேயின் ஏற்பாட்டில் ஹோம்ஸுடன் புலிகளின் ஆயுதப் பொறுப்பாளர் சந்திப்பு

### விமல் வீரவன்ச குற்றச்சாட்டு


(கொழும்பு)

நோர்வேயுடனான இராஜதந்திர உறவுகள் உடனடியாக துண்டிக்கப்பட வேண்டும் என ஆளும் கூட்டணிக் கட்சியான தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை விவகாரங் (14ஆம் பக்கம் பார்க்க)

### ஏற்றுக் கொள்ள முடியாத அளவுக்கு மக்கள் துன்பப்படுகின்றனர்

# இரத்தக்களரியை ஏற்படுத்தும் இறுதி யுத்தத்தை நிறுத்த வேண்டும்



### ஐ.நா. பாதுகாப்புச் சபையில் ஜோன் ஹோம்ஸ் கோரிக்கை

(நியூயோர்க்)

வன்னியில் உருவாகியிருக்கும் மனிதாபிமானப் பிரச்சினை மேலும் மோசமடைந்திருப்பதாகத் தெரிவித்திருக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்களுக்கான செயலாளர் நாயகமும் அவசர நிவாரணங்களுக்கான இணைப்பாளருமான ஜோன் ஹோம்ஸ்,மிகவும் சிறிய பகுதிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள பெரும் எண்ணிக்கையிலான (02ஆம் பக்கம் பார்க்க)

## இரணைப்பாலையில் படையினர் முன்னேற்றம்; 26 புலிகள் பலி

### பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

புதுக்குடியிருப்பு முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் படையினருக்கும் விடுதலைப் புலிகளிற்கும் இடையே இடம்பெற்ற கடும் மோதல்களில் 26 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டிருப்பதாகவும் கொல்லப்பட்ட விடுதலைப் புலிகளின் 6 சடலங்களையும் ஆயுத தளபாடங்களையும் (14ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.குடாநாட்டில் விரைவில் தேர்தல் ஜனாதிபதி மகிந்த உறுதிமொழி

(கொழும்பு)

யாழ். குடாநாட்டில் விரைவில் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களை நடத்துவது பற்றி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமிழ், முஸ்லிம் கட்சிகளுடன் கலந்துரையாடியுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளை அழைத்து அலரி மாளிகையில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய ஜனாதிபதி, வடக்கில் விரைவில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவது பற்றியும் கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி மற்றும் சிறிலங்கா முஸ்லிம் (14ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் தொடரும் அகோர தாக்குதலில் நேற்று ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் உட்பட51 பேர் பலி

(வவுனியா)

வன்னியில் நேற்று இடம்பெற்ற எறிகணைத் தாக்குதல்களில் 14 சிறுவர்கள் உட்பட 51 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 50 பேர் காயமடைந்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

முல்லைத்தீவு, மாத்தளன், அம்பலவன் பொக்கணை, முள்ளிவாய்க்கால் மற்றும் வலைஞர்மடம் ஆகிய பகுதிகளில் ஆட்லெறி, எறிகணை, பல்குழல் தாக்குதல்கள் நேற்று இடம்பெற்றன.

இதில் 14 சிறுவர்களும் 5 மாத கர்ப்பிணிப் பெண்ணும் மற்றும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேரும் உட்பட 51 பேர் கொல்லப்பட்டுள்ளனர். (14ஆம் பக்கம் பார்க்க)

சிறுவர்களை மீட்போம்
சிறுவர் ஆட்சேர்ப்பை நிறுத்து

போருக்கு சிறுவர்களை ஆட்சேர்ப்பது இலங்கை மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு முரணானது. இந்தப் பிரச்சினையில் இலங்கை அரசாங்கம் பூரண எதிர்ப்புக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறது.

புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதி செயலகம்
unicef

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுநடத்த ஜனாதிபதி கதவுகளை திறந்தே வைத்துள்ளார்

## பொறுப்புக்களை தட்டிக்கழிக்காமல் பங்கேற்க வேண்டும்-அமைச்சர் யாப்பா

(கொழும்பு)

பேச்சுவார்த்தை மூலமே தேசிய பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்று வலியுறுத்தும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு, பேச்சுவார்த்தைக்காக அரசாங்கத்தின் உயர் மட்டத்திலிருந்து விடுக்கப்பட்ட அழைப்பை நிராகரித்துள்ளது.

இது ஏன் என்று எங்களுக்கு புரியவில்லை. அமெரிக்காவினதோ சீனாவினதோ மக்களைப் பற்றி பேச்சு நடத்த ஜனாதிபதி அழைப்பு விடுக்கவில்லை. மாறாக தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றி பேச்சு நடத்தவே அழைப்பு விடுத்திருந்தார் என்று ஊடகத்துறை அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார். எதிர்காலத்திலும் எந்த நேரத்திலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினருடன் பேச்சு நடத்துவதற்காக ஜனாதிபதியின் கதவுகள் திறந்தே உள்ளன என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அரசியல் நிலைமைகள் தொடர்பில் பேச்சு நடத்துவதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுத்த அழைப்பை தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் நிராகரித்தமை தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுத்த அழைப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிராகரித்துள்ளது. ஆனால் பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்று கூட்டமைப்பு வலியுறுத்துகின்றது. அப்படியானால் அவர்கள் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள வேண்டுமே? பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியாக இருக்கிறது. அதற்காக தமிழ்கட்சிகளுடன் பேச்சு நடத்த வேண்டியதன் அவசியத்தை உணர்கிறோம்.

இந்நிலையில் என்ன பிரச்சினையாயினும் பேசினால்தானே தீர்வை எட்டலாம்? பேச்சுவார்த்தைகளின் போது கருத்து முரண்பாடுகள் மற்றும் இணக்கப்பாடின்மை என்பன தோன்றலாம். ஆனால் முதலில் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். பிரச்சினை தொடர்பில் பேச்சு நடத்தாமல் பிரச்சினைகள் பற்றி கூறிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.

அதனால்தான் நாட்டின் உயர் மட்டத்திலிருந்து பேச்சுவார்த்தைக்காக அழைப்பு விடுக்கப்பட்டது. உண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அரசாங்கத் தரப்பினருடன் பேச்சு நடத்தி தமிழ் மக்களின் தேவைகள் மற்றும் அபிலாஷைகள் தொடர்பில் எமக்கு உணர்த்த வேண்டும். தமிழ் மக்களின் தேவைகள் தொடர்பில் அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும். இதுதான் இடம் பெற்றிருக்க வேண்டும்.

அதனை விடுத்து பேச்சுவார்த்தைக்கான அழைப்பை ஏன் நிராகரிக்கிறார்கள் என்பது புரிய வில்லை. தமிழ் மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் கூட்டமைப்பினர் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளவேண்டும். தமது பொறுப்பை தட்டிக்கழிக்கக்கூடாது. தமிழ் தேசியக் கூட்டமைப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கதவுகளை எப்போதும் திறந்தே வைத்துள்ளார். இவ்வாறு அவர் கூறினார்.

(ந-5)

# ஈழத்தமிழர்கள் அவலத்தை வெளிபடுத்திய இலண்டன் மாநாடு

## அமெ.,பிரிட்டன் பிரதிநிதிகள் பங்கேற்பு

(இலண்டன்)

இலங்கையில் உடனடியாக போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் அத்துடன் சுயநிர்ணய கோட்பாட்டின் அடிப்படையில் ஈழத் தமிழ் மக்களின் அரசியல்தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் உடனடியாக தொடங்கப்பட வேண்டும் என இலண்டன் மாநாடு கோரியுள்ளது.

இந்த மாநாடு தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் குழுவின் உதவியுடன் பிரித்தானிய தமிழர் பேரவையால் ஒழுங்கு செய்யப்பட்டது.

உலகத் தமிழர் பேரவை என்ற இந்த இரண்டு நாள் அனைத்துலக மாநாட்டின் நிறைவுநாள் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை இலண்டனில் உள்ள கிறவுண் பிளாஸா விடுதியில் நடைபெற்றது.

22 நாடுகளில் இருந்து 45 தமிழ் கல்விமான்கள், துறைசார் வல்லுநர்கள் மற்றும் இளையோர் எனப் பலர் இந்த இரண்டுநாள் மாநாட்டில் கலந்துகொண்டனர். அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல மனித உரிமைச் செயற்பாட்டாளரான வண. பிதா ஜெசி ஜக்சன் பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்டார். இவருடன் பிரித்தானிய முன்னாள் பாதுகாப்புத்துறை அமைச்சரும் பிரதமரின் சிறப்புத் தூதுவருமான டெஸ் பிறவுண், பிரபு பால்க்கனர், தொழிற்கட்சியின் தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் மைக் கிறிபித்ஸ், மதிப்பிற்குரிய ஜிமி சவில், பிரித்தானிய மற்றும் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச பணியாளர்களும் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

வன்னியில் இடம்பெற்று வரும் மனிதப் பேரவலம் தொடர்பாக அனைத்துலகம் காத்திரமான நடவடிக்கை எதனையும் மேற் கொள்ளாதது குறித்து ஆழ்ந்த அதிர்ச்சியும் கவலையும் மாநாட்டில் வெளிப்படுத்தப்பட்டது.

- அனைத்து கொலைகளும் தமிழ் மக்களுக் கெதிரான அனைத்து தாக்குதல்களும் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்
- வன்னியில் தேவைப்படும் மனிதாபிமான பணிகள் தங்கு தடையின்றி கிடைக்க வேண்டும்.
- ஐ.நா., அனைத்துலக அரசசார்பற்ற நிறுவனங்கள், செஞ்சிலுவைச்சங்கம் தமிழ் மக்களுக்கான தங்களது பணியினை மீளவும் நிரந்தரமாக அங்கிருந்து மேற் கொள்வதற்கு அனுமதிக்கப் படவேண்டும்.
- உடனடியாக போர் நிறுத்தம் மேற் கொள்ளப்பட வேண்டும்.
- போர்நிறுத்தத்தை தொடர்ந்து தமிழ்மக்களின் சுயநிர்ணய கோட்பாட்டின் அடிப்படையில் அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும்.

ஆகிய தீர்மானங்களும் மாநாட்டில் கலந்து கொண்டவர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப் பட்டது. அத்துடன் ஊடக மாநாடும் அவர்களால் நடத்தப்பட்டது.

(ந-5)

# இந்திய நாடாளுமன்றத் தேர்தல் ஜெயலலிதாவுடன் இணைந்தார் ராமதாஸ்

## நேற்று இருவரும் சந்திப்பு

இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் இணைந்து போட்டியிடுவதற்கு டாக்டர் ராமதாஸ் தலைமையிலான பாட்டாளி மக்கள் கட்சி தீர்மானித்துள்ளது.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவுக்கும், பாட்டாளிமக்கள் கட்சி நிறுவுனர் ராமதாஸுக்குமிடையில் நேற்று சனிக்கிழமை முக்கிய சந்திப்பொன்று நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் பா.ம.கவுக்கு 7 லோக்சபாத் தொகுதிகளையும் ஒரு இராஜசபாத் தொகுதியையும் வழங்குவதற்கு அ.தி.மு.க. இணங்கியது. இதனைத் தொடர்ந்து அ.தி.மு.கவுடன் இணைந்து போட்டியிட பா.ம.க.தீர்மானித்துள்ளது. கடந்த பொதுத் தேர்தலில் கருணாநிதி தலைமையிலான தி.மு.கவுடன் இணைந்து போட்டியிட்ட பா.ம.க., காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசாங்கத்தில் பங்கெடுத்ததுடன் இரண்டு மத்திய அமைச்சுப் பொறுப் புக்களையும் பெற்றிருந்தது. இதன் பின்னர் கருணாநிதியுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளைத் தொடர்ந்து தி.மு.கவிலிருந்து பிரிந்து சென்ற பா.ம.க., அ.தி.மு.கவுடன் இணைந்து கொண்டது.

இந்நிலையில் ஏப்பிரல் மாதம் பொதுத் தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்ட நிலையில் தனது கூட்டணி தொடர்பாக பா.ம.க. திராவிட முன்னேற்றக் கழகத்துடனும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தியது.

ராமதாஸ் அ.தி.மு.கவுடன் இணைந்து கொள்ளப்போகிறார் எனத் தொடர்ந்தும் தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் ராமதாஸுக்கும் தமிழக முதல்வர் கருணாநிதிக்குமிடையில் சந்திப்பொன்று நடைபெற்றது. எனினும் அதில் இணைக்கப்பாடு எதுவும் எட்டப்பட்டிருக்கவில்லை.

இந்த நிலையில் ராமதாஸ் அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதாவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இதில் இணைக்கப்பாடும் எட்ப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை வகித்துவரும் பா.ம.க. உறுப்பினர்களான அன்புமணி ராமதாஸ் மற்றும் வேலு ஆகியோர் பிரதமரைச் சந்தித்து தமது இராஜினாமக் கடிதங்களை கையளிக்கவுள்ளனர்.

அதேநேரம் பாட்டாளி மக்கள் கட்சியை தி.மு.க. கூட்டணியில் போட்டியிடச் செய்வதற்கு காங்கிரஸும் பல்வேறு முயற்சிகளை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

# இரத்தக்களரியை ஏற்படுத்தும்...

பொதுமக்களுடைய பாதுகாப்புத்தான் தமது கவனத்திற்குரிய விவகாரமாகியிருக்கின்றது எனவும் தெரிவித்திருக்கின்றார்.

வன்னியில் உருவாகியிருக்கும் மனிதாபிமானப் பிரச்சினை தொடர்பாக ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையில் விரிவான அறிக்கையொன்றை சமர்ப்பித்து உரையாற்றிய போதே ஜோன் ஹோம்ஸ் இவ்வாறு தெரிவித்தார்.

பொதுமக்களுடைய இழப்புக்களைப் பொறுத்தவரையில் அதன் எண்ணிக்கையை எம்மால் சரியான முறையில் குறிப்பிட முடியாவிட்டாலும் அந்த இழப்புகள் துன்பகரமான முறையிலும், ஏற்றுக் கொள்ள முடியாத விதத்திலும் பெருமளவிற்கு அதிகரித்திருக்கின்றது.

பெப்ரவரி, மார்ச் மாதங்களில் நாளாந்தம் பல நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்ட அதேவேளையில், பெருந்தொகையானவர்கள் காயமடைந்திருக்கின்றனர். இந்த இழப்புகளில் பெரும்பாலானவை பாதுகாப்பு வலயப் பகுதியிலேயே இடம்பெற்றிருக்கிறது.

வன்னியின் மனிதாபிமானப் பிரச்சினைகள் தொடர்பாக பெப்ரவரி 27ஆம் திகதி இச்சபையில் நான் விபரித்தேன். ஆனால் அதனைத் தொடர்ந்து இந்த நிலைமைகள் துரதிர்ஷ்டவசமாக மேலும் மோசமடைந்திருக்கின்றன.

தற்போது போர் நடைபெறும் பகுதியில் அரசாங்கப் படைகள் மேலும் முன்னேறியிருக்கின்றன. இதனால் இந்த முன்னணிப் பகுதிகளிலிருந்து அரசாங்கத்தால் பிரகடனப் படுத்தப்பட்ட பாதுகாப்பு வலயம் சில நூறு மீற்றர் தூரத்திற்கு வந்திருக்கின்றது.

இருந்தபோதிலும் அரசாங்கத்தின் நிபந்தனைகளை ஏற்று ஆயுதங்களை கீழே போடுவதற்கோ அல்லது பொதுமக்களை வெளியே செல்ல அனுமதிக்கவோ விடுதலைப் புலிகள் மறுத்து விட்டார்கள்.

ஒரு சிறிய பகுதிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள பெருந்தொகையான மக்களுடைய பாதுகாப்புத்தான் எமது கவனத்திற்குரிய விடயமாக தற்போது உள்ளது.

இந்தப் பகுதியில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் முதல் ஒரு இலட்சத்து 90 ஆயிரம் வரையிலான மக்கள் இருப்பதாக எம்மால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஒரு மதிப்பீடு தெரிவிக்கின்றது.

ஆனால் இந்த எண்ணிக்கை 70 ஆயிரத்துக்கும் குறைவானது என்றே அரசாங்கம் சொல்லி வருகிறது. பொதுமக்களுக்கு ஏற்பட்டுவரும் உயிரிழப்புகள் துன்பகரமானதாகவும் ஏற்றுக் கொள்ள முடியாதளவுக்கு அதிகமானதாக இருப்பதாக எமக்கு அண்மையில் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மைக்காலத்தில் பொதுமக்களின் அடர்த்தி அதிகரித்திருப்பதனாலும், கனரக மற்றும் சிறிய ரக ஆயுதங்களின் பாவனை அதிகரித்திருப்பதாலும் அவற்றால் பொதுமக்களுக்கு ஏற்படக் கூடிய ஆபத்தும் அதிகரித்திருக்கின்றது.

கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துவதை தவிர்த்துக் கொள்வதாகவும் பாதுகாப்பு வலயம் பற்றிய நிலைப்பாட்டை பேணி வருவதாகவும் அரசாங்கம் பல சந்தர்ப்பங்களில் உறுதியளித்திருந்தது.

இருந்தபோதிலும் இரண்டு பக்கத்திலிருந்தும் எறிகணைத் தாக்குதல் இடம்பெறுவதாக செய்திகள் கிடைத்துள்ளன.

பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் விடுதலைப் புலிகள் தமது தாக்குதல் நிலைகளை அமைத்திருப்பதாக தெரிகிறது.

ஆயிரக்கணக்கான சிறுவர்கள் இந்தப் பகுதியிலிருப்பதால் ஊட்டச்சத்தின்மையும், நோய்களும் ஏற்படக் கூடிய ஆபத்தும் உருவாகியிருக்கின்றது.

கடல் வழியாக வழங்கப்படும் மனிதாபிமான உதவிகள் வரையறுக்கப்பட்டதாகவே இருக்கின்றன என்று தெரிவித்த ஜோன் ஹோம்ஸ், உணவு மற்றும் நிவாரண விநியோகம், மக்களின் சுகாதாரப் பிரச்சினைகள், படுகாயமடைந்தவர்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்கு அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொண்டுள்ள பணிகள் உட்பட பல விடயங்களையிட்டும் தனது கருத்துக்களையும் அக்கறையையும் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

இந்த மனிதாபிமானப் பிரச்சினைகள் தொடர்பாக தொடர்ந்தும் தமது கவனத்தைச் செலுத்துமாறு உறுப்பு நாடுகளைக் கேட்டுக் கொண்ட ஜோன் ஹோம்ஸ், பிரச்சினைக்கு விரைவாக சமாதான வழிகளில் தீர்வைக் காண்பதற்கு அனைத்துலக சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

பொதுமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையக் கூடிய நடவடிக்கைகளையும் தவிர்த்துக் கொள்ளுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்ட அவர் இரத்தக்களரியை ஏற்படுத்தக் கூடிய இறுதித் தாக்குதல் நடவடிக்கைகளையும் தவிர்த்துக் கொள்ளுமாறு வலியுறுத்தினார்.

(ந-5)


## தவறிவிட்டது

விக்காவில், காரைநகரை நிரந்தர வதிவிடமாகவும் தற்போது தொல்புரம் கிழக்கு, சுழிபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மங்களேஸ்வரி அருளானந்தன் என்பவரது தே.அ. அட்டை (இல.608011250V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு தயவுடன் வேண்டுகிறோம்.

(இ)

## ஹொக்கிச் சுற்றுப் போட்டி

யாழ். மக்கள் வசந்த எழுச்சிப் பேரவையின் ஆதரவுடன் யாழ். மாவட்ட ஹொக்கிச் சங்கம் நடத்தும் ஹொக்கிச் சுற்றுப் போட்டிகள் நாளையும் நாளை மறுநாளும் ஏப்ரல் 2 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும் நாளைய போட்டியில் பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரியை எதிர்த்து யாழ் ஸ்ரார் வி.கழகமும், பிற்பகல் 3.45 மணிக்கு ஒல்ட்கோல்ட் வி.கழகத்தை எதிர்த்து யங்கென்றீஸ் வி.கழகமும் மோதவுள்ளதாக யாழ். மாவட்ட ஹொக்கி சங்க செயலாளர் ஆர். குகன் தெரிவித்துள்ளார். (ஓ-4)

## ஒப்பந்தக்காரர்களுக்கான ஒன்று கூடல்

வடமராட்சி - தென்மராட்சியில் உள்ள சகல ஒப்பந்தகாரர்களையும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலிசந்தி சதாபொன்ஸ் தனியார் கல்வி நிலையத்தில் காலை 9 மணிக்கு ஒன்று கூடுமாறு ஒப்பந்தகாரர்கள் சமூகம் அறிவித்துள்ளது. (ஓ-10)

## வாடிக்கையாளர்களுக்கு குலுக்கல் மூலம் பரிசுகள்

உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவு நகர் ஒரு வருட பூர்த்தி தினத்தை முன்னிட்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு வாடிக்கையாளர்களை குலுக்கல் மூலம் தெரிவு செய்து பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக சங்கப் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். அத்துடன் மேற்படி சங்கம் வெஸ்ரன் யூனியன் பணிப்பரிமாற்ற சேவையையும் ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஓ-10)

## கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி


(யாழ்ப்பாணம்)

வசந்த விழாவை முன்னிட்டு, யாழ் கரப்பந்தாட்ட சமாசம், யாழ் மாவட்ட ரீதியில் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி ஒன்றினை நடத்தவுள்ளது.

இப்போட்டியில் கலந்து கொள்ள 16 அணிகள் விண்ணப்பித்துள்ளதாக கரப்பந்தாட்ட சமாசத் தலைவர் கே. ஏகாம்பரம் தெரிவித்துள்ளார்.

இப்போட்டி தொடரின் ஆட்டங்கள் யாவும் ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் வித்தியாலய ஆடுகளத்தில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் முதல் ஆட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும் என்றும் யாழ் கரப்பந்தாட்ட சமாச செயலாளர் கே. மனோகரன் தெரிவித்துள்ளார். (ஓ-110)

## வட்டு பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம்



வரலாற்றுச் சிறப்பு மிக்க வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம்பதி வீரபத்திரர் சமேத பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவ பெருவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் ஏழாம் திகதி சப்பறத் திருவிழாவும், எட்டாம் திகதி இரதோற்சவமும், ஒன்பதாம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

கடந்தவருடம் யாழ் குடாநாட்டில் ஏற்பட்ட திடீர் வெள்ளப் பெருக்கின் போதும் ஆலய வெளி வயல் வீதிகளில் வெள்ளம் நிறைந்திருந்த வேளையிலும் சப்பறம், இரதோற்சவம் சிறப்பாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-27)

## கோப்பாய் பகுதியிலுள்ள வீடொன்றில் திருடர்கள் கைவரிசை

கோப்பாய் பகுதியிலுள்ள வீடொன்றில் புகுந்து திருடர்கள் சுமார் 56 1/2 பவுண் பெறுமதியான நகை மற்றும் பொருட்களை களவாடியுள்ளனர்.

இச் சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு கோப்பாய் தெற்கு பகுதியிலுள்ள வீடொன்றில் இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவம் குறித்து தெரியவருவதாவது, குறித்த வீட்டினுள் நுழைந்த திருடர்கள் வீட்டிலிருந்தோர் உறங்கிக் கொண்டிருந்த சமயம் அறையில் மயக்கமருந்தினை விசிறிவிட்டு அந்த அறையிலிருந்து 56 1/2 பவுண் நகை, 12 ஆயிரத்து 700 ரூபா பணம், இரண்டு கைத்தொலைபேசிகள், கமரா, துவிச்சக்கரவண்டி ஒன்று என்பவற்றை திருடியுள்ளனர்.

இது குறித்து கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிசார் விசாரணைகளை நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 50-80 | 60 |
| பச்சைமிளகாய் | 50 | 60 |
| தக்காளி | 40 | 50 |
| அவரை | 30 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 70 |
| கோவா | 15 | 20 |
| கரட் | 35 | 40 |
| பூசணி | 20 | 30 |
| புடோல் | 20 | 30 |
| வாழைக்காய் | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 25 | 30-35 |
| பெரிய வெங்காயம் | 40 | 50-60 |
| பாகற்காய் | 80 | 80 |
| வெண்டிக்காய் | 30 | 40 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 |
| பயிற்றங்காய் | 20 | 40 |
| லீக்ஸ் | 100 | 110 |
| போஞ்சி | 70 | 80 |
| கீரை - 1 பிடி | 20 | 25 |
| தேசிக்காய் | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30-35 | 30-35 |

## வாரம் ஒரு தகவல்

## மனம் மாற வேண்டும்

"மனிதன் ஏன் திருடுகிறான் சேர்?"

"அவனுக்கு ஏதோ தேவைப்படுகிறது. அதனால் தான் திருடுகிறான்"

"தேவைப்படும் எல்லோரும் திருடுவதில்லையே!'

"மனம் உணர்ச்சிகளுக்கு அடிமையாகிறது. அதனால் ஆறுவகையான கெட்ட குணங்கள் வந்துவிடுகிறது."

"என்னென்ன?"

"பேராசை, கோபம், மமதை, கருமித்தனம், முறையற்ற காம உணர்வு, பழிவாங்கும் போக்கு இந்த ஆறுவகையான தீயகுணங்களும் ஐந்து வகையான பாவங்களைச் செய்யத் தூண்டுகிறது. அவை என்னவெனில், பொய்பேசுவது, திருடுவது, சூதாடுவது, கலப்படம் செய்வது, கொலை செய்வது"

"இதற்கு என்ன செய்வது?"

"மனதை நெறிப்படுத்த வேண்டும். ஆழ்நிலைதியானம் மூலமாக மனதை சக்தியுள்ளதாகவும் தெளிவுள்ளதாகவும் ஆக்கலாம்"

"அப்படியா?"

"ஆமாம். தீய குணங்களை நல்ல குணங்களாக மாற்றிக் கொள்ளலாம். பேராசை, திருப்தியாக மாறும். கோபம் பொறுமையாக மாறும். மமதை சமத்துவ குணமாக மாறும். பழிவாங்கும் குணம், விட்டுக்கொடுக்கும் குணமாகவும், முறையற்ற காமம், கற்பு நெறியாகவும் மாறும்."

"எல்லோரும் அப்படி மாற வேண்டும் என்பது தான் சேர் என்னுடைய ஆசை.'

"அதுசரி... இன்றைக்கு ஏன் திடீரென்று வந்து திருட்டைப்பற்றி சந்தேகம் கேட்கிறாய்?"

"பாருங்க சேர்... என் காலை"

"என்ன இது, ஒரு காலில் மட்டும் செருப்பு? எங்கிருந்து வந்தாய்?'

"ஒரு கல்யாண மண்டபத்திலிருந்து"

"இன்னொரு செருப்பு எங்கே... காணாமல் போய் விட்டதா?"

"இல்லை. இது ஒன்றுதான் கிடைத்தது."

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இராசி பலன்

29.03.2009
(பங்குனி 16, ஞாயிற்றுக்கிழமை)
திருதியை முன்னிரவு 6.56 மணிவரை
பரணி பின்னிரவு 4.39 மணிவரை
இராகுகாலம் 4.43-6.13 மணிவரை
சுபநேரம் 9.13-10.43 மணிவரை
மானிப்பாய் மருதடி விநாயகர், தாவடி விநாயகர், சுன்னாகம் ஐயனார், சுதுமலை சிவன் கொடியேற்றம்
ஐந்தாம் தவக்கால ஞாயிறு

| | |
|---|---|
| மேடம் | ஆழ்ந்த சிந்தை, புதிய முயற்சி, வெகுமானம், விருந்துபசாரம். |
| இடபம் | மனச்சோர்வு, பெரியோர் உதவி, முயற்சி தாமதம், போசன சுகம். |
| மிதுனம் | குடும்ப சுகம், காரிய நன்மை, பெருமையடைதல், புதிய திருப்பம். |
| கடகம் | பிரபுத்தனம், மனமகிழ்ச்சி, எடுத்த காரியம் கைகூடும், போசன சுகம். |
| சிங்கம் | சரீரப் பிரயாசை, எதிர்பாராத செலவு, அச்சமான நிலை, பிரயாணம். |
| கன்னி | அஜீரணக் கோளாறு, மனக்கவலை, காரியதாமதம், பிரயாண பயம். |
| துலாம் | மனோதைரியம், சயன சுகம், காரிய அனுகூலம், கீர்த்தி. |
| விருச்சிகம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், மனமகிழ்ச்சி, நண்பர்கள் வருகை, தேகநலன். |
| தனுசு | அஜீரணக் கோளாறு, காரிய இடையூறு, தாழ்ந்த சுபாவம், பணக் குறைவு. |
| மகரம் | மனச் சஞ்சலம், புதிய தகவல், தன விரயம், முயற்சி தாமதம். |
| கும்பம் | கூட்டு முயற்சி, மனோ தைரியம், ஜனவசியம், போசன நன்மை. |
| மீனம் | உஷ்ணநிலை, போசன சுகக்குறைவு, மரியாதைக் குறைவு, தனவிரயம். |

வளவன்

## என்னை நம்பு

நான்
ஓர் அமைதிப் புறா
உன் மனசாட்சியோடு - நான்
யுத்தம் செய்ய வரவில்லை...
உன் வேர்களை...
ஒரு போதும் தகர்த்தெறிய
விரும்பவில்லை...
நீயும் - நானும்
சேர்ந்து பயணிப்பதற்கு
ஒரு புதிய கட்டுமரம்
கட்டவே வந்துள்ளேன்...
நாளைய உலகை
கறுப்பின ஒபாமா போல் - நாம்
வெற்றி கொள்வதற்கு...

சா. ரமேஸ்குமார், மீசாலை கிழக்கு.

## நேரம் வரும்

காலங்கள் மிகவும் அழகானவை
அதனால் தான்
என்னைக் கண்டவுடன்
ஓடி ஓடி ஒளிகின்றன.
வெட்கத்தில்...

நேரம் மிகவும் புனிதமானது
அதனால் தான்
என்னைக் கண்டவுடன்
துடி துடித்துப் போகின்றது
நாணத்தில்...

என்மனம் புனிதமானால்
என்னிடத்தில் வரும் - அந்த
புனிதமான நேரம்
எனக்கான நேரமாய்
அப்போது அழகான
காலம் என்னடியில்
வெட்கத்துடன்...

சி.சுனந்தன் (அருவி), பொலிகண்டி.

# ஈழத்தமிழர் துயரம் ஐ.நா. மறைக்கிறது ! சீனா மழுப்புகிறது !!

ஈழத்தமிழர்களை திட்டமிட்டு இனப்படு கொலை செய்து வரும் ஸ்ரீலங்கா அரசின் நடவடிக்கைகளை அரை மனதோடு உலக நாடுகள் கண்டனம் செய்வதை புரிந்துகொள்ளலாம். ஆனால் அதனை மறைக்க முற்படும் ஐ.நா.வின் நடவடிக்கை தான் அதிர்ச்சியையும் , உலக நாடுகளின் அந்த பொது அமைப்பின் மீது சந்தேகத்தையும் தோற்றுவிக்கிறது.

இலங்கையில் இராணுவமும் ,விமானப்படையும் அன்றாடம் நடத்தி வரும் பீரங்கித் தாக்குதல்களிலும் குண்டுவீச்சுகளிலும் கொன்று குவிக்கப்பட்டுவரும் அப்பாவித் தமிழர்களின் எண்ணிக்கை தொடர்பான விபரங்களைத் தொகுத்து அறிக்கையாக்கியுள்ள ஐ.நா.வின் மனிதாபிமான விவகாரங்கள் ஒருங்கிணைப்பு அலுவலகம்,அதனை வெளியிடாமல் வைத்திருந்தும் அது ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அனுப்பப்பட்டபோது கசிந்ததை ஐ.நா. அலுவலகத்தில் செயற்படும் ஊடகம் ஒன்று (Iner City Press) வெளிக்கொணர்ந்துள்ளது.

ஐ.நாவின் மனிதாபிமான விவகாரங்கள் ஒருங்கிணைப்பாளர் அலுவலகம் (Office of the Coordinator for Humanitarian Affairs-OCHA) தொகுத்திருந்த அந்த அறிக்கையில் அளிக்கப்பட்டிருந்த விபரங்கள் உலகத்திற்கு தெரிய வந்திருந்தால் அது இலங்கை அரசிற்கு எதிராக பெரும் கண்டனத்தை உருவாக்கிவிடும் என்பதற்காகவே மறைக்கப்பட்டதாக *இன்னர் சிட்டி பிரஸ்*



அமைப்பின் இதழியலாளர் மத்யூ ரஸ்ஸல் லீ கூறியுள்ளார்.

போர் நடை பெற்று வரும் முல்லைத் தீவுப் பகுதியில் ஜனவரி 20 ஆம் தேதி முதல் மார்ச் 7 ஆம் திகதி வரை 9ஆயிரத்து 924 அப்பாவி மக்கள் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர். இவர்களில் 2 ஆயிரத்து 683 பேர் உயிரிழந்துள்ளனர். 7 ஆயிரத்து 241 பேர் காயமுற்றுள்ளனர். அங்கு ஒவ்வொரு நாளும் கொல்லப்பட்ட மக்களின் எண்ணிக்கை ஒரு மாதத்திற்குள் இரட்டிப்பாகியுள்ளது என்பது தான் அந்த அறிக்கையில் உள்ள முக்கிய விபரமாகும்.

தங்களுக்கு கிடைத்த இறந்தவர்கள் எண்ணிக்கை மிகவும் குறைத்து உறுதிப்படுத்தப்பட்டது(Conservative Casualties Figures) என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அப்படியானால் இலங்கை படைகளின் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை இதை விட அதிகமாக இருக்கும் வாய்ப்புள்ளது என்பதை சொல்லாமல் ஒப்புக்கொண்டுள்ளது ஐ.நாவின் மனிதாபிமான விவகாரங்கள் அமைப்பு.

ஜனவரி ,பெப்ரவரி மாதங்களில் இரு தரப்பினருக்கும் இடையிலான போர்ப் பகுதி100 சதுர கி.மீ பரப்பளவில் இருந்து 45 சதுர கி.மீ ஆக குறைந்துள்ளது. என்று கூறியுள்ள ஐ.நா அறிக்கை ,அப் பகுதியில் பொது மக்கள் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு 14 சதுர கி.மீ என்று கூறிவிட்டு ஒரு முக்கிய விபரத்தை கடைசியில் குறிப்பிட்டுள்ளது. கொல்லப் ட்ட அப்பாவி களில் மூன்றில் இரண்டு பங்கினர் பாது காப்பு வலயத்திற்குள் இருந்தவர்கள் என்று கூறியுள்ளது. அதாவது இலங்கை படைகள் பொது மக்கள் மட்டுமே தங்கியுள்ள பாதுகாப்பு வலயத்திற்குள்நடத்திய தாக்குதலில் தான் 47 நாட்களில் ஆயிரத்து 800 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று கூறியுள்ளது.

இது மட்டுமின்றிஇலங்கை படைகள் தொடர்ந்து கடுமையான தாக்குதலை மேற்கொண்ட நாட்களில்அதாவது பெப்ரவரி 12ஆம் திகதிக்கு முன்னர் கொல்லப்பட்டவர்களின்எண்ணிக்கை பெருமளவிற்கு குறைத்து கூறப்பட்டுள்ளது.(Greatly Under Reported ) என்றும் அந்த அறிக்கை கூறியுள்ளது.

போர் பகுதியின் அளவு சுருங்கச் சுருங்க கொல்லப்பட்ட அப்பாவி மக்களின் எண்ணிக்கை இரு மடங்காகியுள்ளதையும் அந்தஅறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.

### இந்த உண்மை மறைக்கப்பட்ட நோக்கமென்ன?

ஜனவரி20 ஆம் திகதி முதல் மார்ச் 07 ஆம் திகதி வரை முல்லைத்தீவுப் பகுதியில் குறைந்த பட்ச தகவல்களின் அடிப்படையிலேயே 2ஆயிரத்து 683அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களின் மூன்றில் இரண்டு பங்கினர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் இருந்தவர்கள் என்று குறிப்பிடப்பட்டதுமட்டுமின்றி, இதே கால கட்டத்தில் இலங்கை படைகளின் தரக்குதலில் (இதை வெளிப்படையாகக் குறிப்பிடாமலேயே அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது) மேலும்7 ஆயிரத்து 241 பேர் காயமுற்றனர் என்று கூறும் அந்த அறிக்கைஎ்ய வெளியிடாததன் நோக்கமென்ன?

மக்கள் கொல்லப்படும் உண்மை உலகத்திற்கு புரிந்து விடக் கூடாது என்பது தானே? தாங்கள் நடத்திக் கொண்டிருப்பது விடுதலைப் புலிகள் எனும் பயங்கரவாத இயக்கத்தை ஒழிக்கும் உள்நாட்டுப் போர் என இலங்கை அரசுபறை சாற்றி வருவதை உடைத்தெறிவதற்கு இந்த ஒரு விபரம் ஒன்றே போதுமானதல்லவா? இது ஈழத் தமிழர்களின் உரிமையை மீட்டெடுக்கப்போராடி வரும் விடுதலைப் புலிகளை மட்டுமல்ல, தமிழினத்தையே கொன்றொழிக்கும் நடவடிக்கை என்பதை உல்கம் புரிந்து கொண்டு விடும் என்பதை மறைப்பதற்கு, தான் விசனப்பட்டு தயாரித்த இந்த அறிக்கையையே மறைத்துள்ளது ஐ.நா.வின் மனிதாபிமான விவகார ஒருங்கிணைப்பு அலுவலகம்!

இலங்கையில்விடுதலைப் புலிகளுக்கும் அந் நாட்டு அரச படைகளுக்கும் நடைபெற்ற போரில் இடையில் சிக்கி அப்பாவி மக்கள் சாகிறார்கள் என்று ஒரு ராஜதந்திரமான உருவாக்கத்தை கூறி உலகிற்கு நம்பவைக்கும் நடவடிக்கையில் இலங்கை அரசும், அதனை, அதன் நடவடிக்கைகளை ஆதரிக்கும் இந்தியா, பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளும் முயற்சித்து வருகின்றன. உலக நாடுகளின் அரசுகளும் இந்த பயங்கரவாத போரை தங்கள் வசதிக்காக (உண்மை என்னவென்று நன்கு



தெரிந்தும்) 'நம்பி' ஏற்றுக்கொண்டு , அங்கு சிக்கியுள்ள அப்பாவி மக்களை காப்பாற்ற வேண்டும் என்று மனிதாபிமான கண்ணீர் வடிக்கின்றனர்.

ஐ.நாவின்மனிதாபிமான அமைப்பு தயாரித்து வைத்திருந்த இந்தஅறிக்கையை அதிகாரப் பூர்வமாக வெளியிடப் பட்டிருக்குமாயின் இலங்கையின் பயங்கரவாத முகம் உலக நாடுகளுக்கும் மக்களுக்கும் முழுமையாக வெளிப்பட்டிருக்கும். அப்படிப்பட்ட சங்கடத்தை மிக அழகாக தவிர்த்துவிட்டது ஐ.நாவின்துணை அமைப்பு.

இலங்கை படைகளின் தாக்குதலில் பாதிக்கப்பட்ட பொது மக்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று கடந்த மாதம் 17 ஆம் திகதி நடந்த செய்திளார்கள் கூட்டத்தில் பேசிய ஐ.நா தலைமைப் பொதுச் செயலர் பான்கீ மூனின் பேச்சாளர் மிஷல் மோண்டாஸ் அவர்களிடம் கேட்டதற்கு "நாங்கள் மக்களை காப்பாற்றத்தான் முயற்சிக்கின்றோமே தவிர, அங்கு பிணாங்களை எண்ணவில்லை. என்று காட்டமாக பதிலளித்தார். ஆனால் கொல்லப்பட்டவர்களின் விபரம் அப்பொழுதே இருந்தது என்பது இப்போது தெரிய வந்துள்ளது.

ஆக இந்த மறைப்பு நடவடிக்கை திட்டமிட்டது தான் என்று உறுதியாகத் தெரிகிறது.

அது மட்டுமல்ல,அது வெளியிடாமல்வைத்திருந்த மற்றொரு அறிக்கையையும் *இன்னர் சிட்டி பிரஸ்* வெளிக்கொணர்ந்துள்ளது.

"போர் நிகழும் " வன்னிப் பகுதியில் சிக்கியுள்ள மக்களின் எண்ணிக்கை ஒன்றரை இலட்சத்தில் இருந்து இரண்டு இலட்சம் வரை இருக்கலா்ம்(வெறும் 70ஆயிரம் தான் என்று இலங்கை அரசு கூறியதை இந்திய அயலுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி நாடாளுமன்றத்திலேயே கூறினார்) என்று கூறிவிட்டு,அவர்களுக்கு ஒரு மாதத்திற்கு மட்டும் 3ஆயிரம் மெட்ரிக் தொன் அளவிற்கு உணவு மற்றும் நிவாரணப் பொருட்கள் தேவைப்படும் என்றும், போதுமானஉணவுப் பொருட்கள் வன்னிக்கு வெளியே தயாராக வைக்கப்பட்டிருந்தும் அவைகளை பாதிக்கப்பட்ட மக்களுக்கு (வன்னிப் பகுதியில்) கொண்டு செல்ல அரசு அனுமதிக்கவில்லை என்பதையும் மற்றொரு அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.

"தொடர்ந்து நடந்தபேச்சு வார்த்தைக்குப்பின்500 மெட்ரிக் தொன் உணவுப் பொருட்களை வன்னிக்கு- கடல் மார்க்க மாக கொண்டு செல்ல இலங்கை அரசு அனுமதித்துள்ளது என்று அந்த அறிக்கை கூறியுள்ளது.

இதெல்லாம் உலகிற்கு தெரியப்படுத்தப் பட்டிருந்தால்இலங்கை அரசின் செயற்பாடுகள் திட்டமிட்டே மறைக்க உதவி வரும் ஜனநாயக அரசுகளின் மனிதாபிமான சாயம் வெளுத்து விட்டிருக்குமே எவ்வளவு வசதியாக மறைத்து விட்டது. ஐ.நா.

ஏழு கோடி தமிழர்கள் வாழும் இந்தியாவில் உள்ள எந்த ஊடகத்திலும் இந்த செய்தி வரவில்லையே இதுவே ஐ.நா அதிகாரப் பூர்வமாக அறிவித்திருந்தால் எப்படிப்பட்டஅரசியல் நகர்த்தல்கள் சர்வதேச அளவில் முன்னெடுக்கப்பட்டிருக்கும்?

### சீனாவின் எதிர்ப்பும் மழுப்பலும்

இந்த விபரங்கள் வெளியானதும் ஈழத்தமிழரின் துயரத்தை ஐ.நா.வின் பாதுகாப்புப் பேரவையில் (Security Council ) மீண்டும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அதன் தற்காலிக உறுப்பினர்களாக உள்ள ஆஸ்ட்ரியா, மெக்ஸிகோ, கோஸ்டாரீகா ஆகிய நாடுகள் கோரிக்கை விடுத்தன. இதனை பாதுகாப்புப்பேரவையின் நிரந்தர உறுப்பினரான சீனா எதிர்க்கிறது.

அது சொல்லும் காரணம் இதுதான் இலங்கையில் நடைபெறுவது அந்நாட்டின் உள் நாட்டுப் பிரச்சினை அதுமட்டுமின்றி அதனால் சர்வதேச அமைதிக்கோ பாதுகாப்பிற்கோ எந்த அச்சுறுத்தலும் இல்லை எனவே அதனை பாதுகாப்புப் பேரவையில் விவாதிக்கக்கூடாது என்று சீனா கூறியுள் ளது.

எப்படியிருக்கிறது கதை பாதுகாப்பு வலயத்திற்குள் இருப்பவர்கள் மீதே எறிகணை தாக்குல்களும் பல்குழல் பீரங்கித்தாக்குதல்களும் நடத்தப்படுகிறது.

அம்மக்களுக்கு ஐ.நா. தனது உலக உணவுத்திட்டத்தின் கீழ் உணவு , நிவாரணப்பொருட்களை அனுப்பாமல் பட்டினி போட்டு சாகடிக்கிறது.இப்படிப்பட்ட மானுட அவலம் அரங்கேற்றப்படுவது ஒரு நாட்டின் உள் நாட்டுப்பிரச்சினையா ?

யாருக்குப்பாடம் நடத்துகிறது சீனா என்று புரியவில்லை. அதுவும் கம்யூனிஸ்ட் சீனா ! தனது நாட்டிற்குள் தன்னாட்சி உரிமை கோரிய திபெத்தியர்களை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கி 90ஆயிரம் பேரைக் கொன்றொழித்த மனிதாபிமான நாடல்லவா ? அதனை உள் நாட்டு விவகாரம் என்றெல்லவா இன்று வரை கூறி வருகிறது. எனவே இதையும் உள் நாட்டு விவகாரம் தான் என்று அதனால் ஏற்றுக்கொள்ள முடியும். அதன் அபார அரச கொள்கை அது.

**தமிழகத்திலிருந்து தமிழன்**

ஆனால் உலகின் மற்ற நாடுகள்? அப்பட்டமாக உண்மை வெளிக்கொணரப்பட்டுள்ளது. இதன் மீது உலக நாடுகள் கவனம் செலுத்தியாகவேண்டும். இது அவர்க்ளின் மீதுள்ள கட்டாயப்பொறுப்பு இதனைச் செய்யத் தவறினால் மானிடத்தின் சுதந்திரம் உள்ளிட்ட உரிமைகளைப் பாதுகாக்க அரசுகளையும் அவைகளின் கூட்டமைப்பான ஐ.நா.வையும் தாண்டி செயல்படவேண்டிய நிர்ப்பந்தம் உலக மக்கள் சமூகத்திற்கு ஏற்படும் எனவே ஐ.நா.வும் அதன் உயர் அதிகாரம் பெற்ற அமைப்பாக திகழும் பாதுகாப்புப்பேரவையின் உண்மையுடன் செயற்பட முன் வரவேண்டும்.

# விரிவுரையாளர் பரந்தாமன் எழுதிய ஆங்கிலநூல் உயர்தர மாணவர்களுக்கு வரப்பிரசாதம்

**யாழ்.பல்கலைக்கழக ஆங்கிலமொழி விரிவுரையாளர் வ.பரந்தாமன் எழுதிய க.பொ.த.உயர்தர மாணவர்களுக்கான ஆங்கில இலக்கிய நூலின் விமர்சனம் இங்கு தரப்படுகிறது. (ஆ-ர்)**

*வ.பரந்தாமன் (விரிவுரையாளர், ஆங்கில மொழிப் போதனை) எழுதிய க.பொ.த உயர்தர வகுப்புகளில் ஆங்கில இலக்கியம் கற்றல், கற்பித்தலிற்கான வழிகாட்டி நூல்* (Study Package for G.C.E A/L English Literature)

க.பொ.த.உயர்தர வகுப்புகளில் ஆங்கில இலக்கியத்தை முதன்மைப் பாடமாகக் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையானது யாழ்.நகரைப் பொறுத்தவரை மிகவும் அரிதாகவே காணப்படுகின்றது. யாழ்.நகரில் ஒரு குறிப்பிட்ட சில கல்லூரிகளில் மாத்திரம் இக் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேற்படி வழிகாட்டி நூலானது க.பொ.த.உயர்தர வகுப்புக்களில் ஆங்கில இலக்கியத்தை தமது முதன்மையான பாடங்களில் ஒன்றாக எடுக்கும் மாணவர்களிற்கு பெரும் வரப்பிரசாதமாகவுள்ளது.


இவ் வெளியீட்டில் சிறுகதைகள், நாவல் ஆகியவற்றில் மாணவர்களிற்குத் தேவையான, இறுதிப் பரீட்சைக்கு உகந்த பல விடயங்கள் உள்ளடக்கப் பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் ஆங்கில இலக்கியத்துடன் சம்பந்தப்பட்ட நூல்களை வெளியிடும் சந்தர்ப்பங்கள் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றன. இக் குறைபாட்டை நீக்கும் வகையில் வ.பரந்தாமன் வெளியிடும் இரண்டாவது நூலாக இது அமைகின்றது.

அவர் தனது முதலாவது வெளியீடாக "A Guide to Village by the Sea" எனும் நூலினை க.பொ.த. சாதாரண தரத்தில் ஆங்கில இலக்கிய மாணவர்களிற்காக வெளியிட்டிருந்தார். இவ் வெளியீடானது மாணவர்களின் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தது.

இரண்டாவது வெளியீட்டில் இலக்கியம் கற்றல், கற்பித்தலிற்கான அணுகுமுறை மிகவும் கவர்ச்சிகரமானதாகவும், மாணவர்களையும், ஆசிரியர்களையும் துல்லியமாக வழிநடத்தும் போக்கிலும் அமைந்துள்ளதைக் காணலாம்.

அவர் எல்லாக் கருத்துக்களையும், மாணவர்களது நிலையில் நின்று கொண்டே அணுகுகின்றார்(Student Centred Approach). மாணவர்கள் எளிதில் பின்பற்றக்கூடிய வழிகாட்டி நூலாகவும்,அவர்களது தேடல்களை மேலும் ஊக்குவிப்பதற்காக பல்வேறு பட்ட விடயங்களைப் பரந்த அளவில், மிகவும் ஒழுங்கான முறையில் தொகுக்கப்பட்டுள்ளன.




இத்தகைய பன்மைத்தன்மை வாய்ந்த நூலாசிரியரது வழிகாட்டல், மாணவர்களிற்கு தமது விடைகளை பல்வேறு பட்ட கோணங்களில் (Logical, thematic, and Argumentative view) தொகுத்து சிறப்பாக வழங்க வழி வகுக்கும் என்பதில் ஐயமில்லை.

அவர் பின்வரும் சிறுகதைகளைத் தனது ஆய்வில் எடுத்துக் கொண்டுள்ளார்.

**1.Araby -James Joyce.**
**2.Love Letters -Kate Walker.**
**3.Stench of Kerosene-Amrita Pritam.**
**4. Unlighted Lamps-Sherwood Anderson.**

மேலே குறிப்பிடப்பட்டுள்ள சிறுகதைகள் உலகளாவிய ரீதியில் பொருத்தமான கருத்துக்களைக் கொண்டு விளங்கும் இலக்கிய வடிவங்களாகும். இச் சிறுகதைகளை நூலாசிரியர் தனக்கே உரியபாணியில், மாணவர்களிற்கு விளங்கக்கூடிய வகையிலும், ஆசிரியர்களிற்கு தமது கற்பித்தலிற்கான முன் ஆயத்தங்களை மேற்கொள்ளக் கூடிய வகையிலும் மிகவும் சிறப்பாக தொகுத்து வழங்கியுள்ளார்.

பொதுவாக நாம் எல்லாக் கருத்துத் தொகுப்புகளையும் நோக்கும்பொழுது, குறிப்பாக சில முக்கியமான தலைப்புக்களிற்குள் பல விடயங்கள் உள்ளடக்கப் பட்டிருப்பது நூலின் சிறப்பம்சங்களில் ஒன்றாக அமைந்துள்ளது.

**1.Setting and Structure.**
கதைகளில் ஆரம்ப ஒழுங்கமைப்பு மற்றும் கட்டமைப்பு பற்றிய விடயங்கள்.


**2.Plot development and characterization** திட்டமிடல் மற்றும் கதாபாத்திரங்களின் அறிமுகம், வளர்ச்சி பற்றியது.

**3. Thematic revelation** இலக்கிய கருப்பொருள் பற்றிய நுண்ணிய ஆய்வு.

**4.Point of view-** நோக்கு

அத்துடன் மாணவர்கள் தாமாக இந் நூலினை வாசிக்கும்பொழுது பல விடயங்கள் அவர்களால் கிரகித்துக் கொள்ளக்கூடிய வகையில், கருத்துக்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் இச் சிறுகதைகள் பற்றி விரிவான விளக்கத்தினை வழங்குவதற்காக Appendix 1 சேர்க்கப்பட்டுள்ளது.



இவற்றை நோக்கும்பொழுது பரந்த அறிவுள்ள, உலகளாவிய ரீதியில் தர்க்கிக்கப்பட்ட பல்வேறுபட்ட கருத்துக்கள் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றினை வாசிக்கும்பொழுது, யாவருக்கும் இயல்பாகவே தர்க்கிக்கும் ஆற்றல் வளரும் என்பது உண்மை.

ஏற்கனவே கூறப்பட்டுள்ள நான்கு சிறுகதைகளின் மூலவடிவமும் இத் தொகுதியிலேயே இணைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சகல விடயங்களும் ஒன்றாக இருப்பது மாணவர்களிற்கு மிகவும் பயனளிக்கக் கூடியவகையிலும், அவர்களது அறிவுத் தேடல்களை ஒரு முகப்படுத்தி மேலும் மெருகூட்டும் வழியில் அமைந்துள்ளமை வரவேற்கத்தக்கது. நன்கு திட்டமிடப்பட்ட ஒழுங்கான முறையில் கட்டமைப்பிற்குள் வடிவமைக்கப்பட்டுள்ள இந் நூலை மாணவர்கள் தமது தேவைகளிற்கேற்ப கற்பதற்குரிய வழிமுறைகளினூடு வழங்கிய நூலாசிரியரின் பாங்கு மிகவும் வரவேற்பதற்குரிய அம்சமாகும்.

K.ஸ்ரீ ராஜ்குமார் B.A. N.D.T(Eng)
ஆசிரியர்
யாழ்/ வேம்படி மகளிர் கல்லூரி

# நாட்டின் பொருளாதார வளர்ச்சி பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது

**எஸ்.பி.திஸாநாயக்க தெரிவிப்பு**

இன்று உலகில் ஏற்பட்டுள்ள உலகப் பொருளாதார நெருக்கடியினால் பல நாடுகள் பாரிய சிக்கலை எதிர்நோக்கி வருகின்றன. நம் நாடு இன்று 3.5 சதவீத வளர்ச்சியையே கண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 5 வருடகாலத்தில், 2005ஆம் ஆண்டு 4.4 சதவீத வளர்ச்சியும், 2006 இல் 4.5 சதவீத வளர்ச்சியும், 2009 இல் 4.9சதவீத வளர்ச்சியும்,2008 ஆம் ஆண்டு 4.1 சதவீத வளர்ச்சியும் ஏற்பட்டிருந்தது. 2009 இல் பொருளாதார வளர்ச்சியில் பாரிய வீழ்ச்சியே ஏற்பட்டுள்ளது என்று ஐ.தே. க.நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க நேற்று முன் தினம் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற் றும் போது தெரிவித்தார். அவர் உரையாற்றும் போது,

சி.டி ஸ்மித் எனப்படும் கொழும்பு பங்குச் சந்தை தரகர்கள் அமைப்பின் அறிக்கையின் பிரகாரம் கொழும்பு பங்கு சந்தையில் பதிவாகியிருந்த கம்பனிகளின் அதாவது வங்கிகள், வர்த்தகஸ்தாபனங்களின் இலாபம் 61 சத வீதத்தால் குறைவடைந்துள்ளது. அதேவேளை 2007 ஆம் ஆண்டு 3 ஆயிரத்து 341 டொலர்களாகக் காணப்பட்ட ஏற்றுமதிக்கான வருமானம்,இன்று ஆயிரம் அமெரிக்க டொலர்களாகக் குறைவடைந்துள்ளது.

இலங்கைக்கு இரண்டாவதாக இலாபத்தை ஈட்டித்தரும் வெளிநாட்டு வேலைவாய்ப்பினால் பெறப்படும் அந்நிய செலாவணி குறைவடைந்துள்ளது.2006 தொடக்கம் 2008 வரையில் 16 இலட்சம் இலங்கையர்கள் வெளி நாடுகளில் வேலைவாய்ப்புப் பெற்றிருந்தனர். அவர்களுள் 3இலட்சம் பேர் வேலைவாய்ப்பை இழந்து மீண்டும் இலங்கை திரும்பியுள்ளனர்.

2ஆயிரத்து 502 அமெரிக்க டொலர் மட்டுமே வெளிநாட்டு வேலைவாய்ப்பு மூலம் பெறப்பட்ட அந்நிய செலாவணியாக உள்ளது. அதாவது மத்திய நாடுகளில் வேலைவாய்ப்புப் பெற்றவர்களின் இலாபமாக இருந்தது. மலேசியா,தென்கொரியா,ஜப்பான் போன்ற நாடுகளில் மூலம் கிடைக்கும் அந்நிய செலாவணி 20சதவீதமாகக் குறைவடைந்துள்ளது.

செலிங்கோ மற்றும் ஏனைய கடன் வழங்கும் நிதிநிறுவனங்கள் அதாவது சக்விதி மற்றும் கோல்டன் கீ காட் போன்றவற்றில் ஏற்பட்ட நட்டம் 60 மில்லியன் டொலரைச் சுட்டி நிற்கின்றது.

இவ்வாறான நிலை ஏன் ஏற்பட்டது என்பதை நாம் ஆராய வேண்டும்.அதாவது அரச துறையில் வட்டி வீதம் குறைந்தளவிலேயே அறவிடப்படுகிறது. நாட்டின் பணவீக்கம் 25 சதவீதம் அதிகரித்தது. இதனால் நாட்டின் பணப் பெறுமதி குறைவடைந்தது. இதனால் பணத்தை வைப்புச் செய்தவர்களுக்குப் பாரிய நட்டம் ஏற்படுகிறது.

நாட்டில் பல்கலைக்கழகங்கள் பலவற்றில் பொருளியல் ஆய்வாளர்கள் உள்ளனர் .அவர்களினூடாக மக்களுக்கு உண்மைத் தன்மையை அரசு வெளிப்படுத்த வேண்டும் என்றார்.(ஓ-5)

# 14 அரச சார்பற்ற நிறுவனங்களுக்கே சேவையில் ஈடுபட அனுமதி

**சமூகசேவைகள் அமைச்சர் லயனல் பிரேமசிறி தெரிவிப்பு**

(கொழும்பு)

இலங்கையில் நூற்றுக்கணக்கான அரச சார்பற்ற நிறுவனங்கள் இயங்குகின்ற போதும் அவற்றுள் சிறந்த சேவையாற்றுபவைகளாக இனம்காணப்பட்டுள்ள 14 அரச சார்பற்ற நிறுவனங்களுக்கே வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு சேவையாற்ற அனுமதியளிக்கப்படடுள்ளதாக சமூக சேவைகள் அமைச்சர் லயனல் பிரேமசிறி தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அமைச்சர் அங்கு மேலும் குறிப்பிடுகையில்,

வடக்கு-மற்றும் கிழக்கு மாகாணங்களில் சேவையில் ஈடுபட்டிருந்த நூற்றுக்கணக்கான அரச சார்பற்ற நிறுவனங்கள் அங்குள்ள மக்களுக்கு எந்த சேவையையும் வழங்கவில்லை.

தற்போது வன்னியில் சேவையாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள 14அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளைக் கணக்காணிக்க ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ எம்.பி. யின் தலைமையில் செயலணியொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இது தவிர அமைசர்களான மஹிந்த சமரசிங்க,ரிஷாட் பதியுதீன் மற்றும் மாவட்ட அதிபர்கள் உள்ளிட்ட விசேட குழுக்களும் இந் நிறுவனங்களின் செயற்பாடுகளைக் கண்காணித்து வருகின்றன.

இதேவேளை,அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளைக் கண்காணிக்கும் வகையில் விசேட சட்டமூலமொன்று விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இச் சட்டமூலம் தொடர்பான அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டு அதற்கு அங்கீகாரமும் கிடைத்துள்ளது என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

(ஓ-5)

# சாரதி அனுமதிப்பத்திரம் ; புதிய நடைமுறைகள் அறிவிப்பு

## யாழில் நாளை முதல் விண்ணப்பங்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவது தொடர்பாக புதிய நடைமுறைகள் மோட்டார் போக்குவரத்துத்திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் புதிய சாரதி அனுமதிப்பத்திரம் Smart Card பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்கள் நாளை திங்கட்கிழமை முதல் யாழ். மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் வழங்கப்படவுள்ளது.

இப்படிவங்களை அலுவலக நேரங்களில் பி.ப. 2 மணி வரை பெற்றுக்கொள்ள முடியும் என்று இதுவரை பிரதேச செயலகங்களினால் மேற்கொள்ளப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்தல், இணைப் பிரதிப்பெறல் மற்றும் சேதமடைந்த சாரதி அனுமதிப்பத்திரங்களுக்கு பதிலாக புதிய சாரதி அனுமதிப் பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்தல் ஆகிய செயற்பாடுகள் யாவும் நிறுத்தப்பட்டுள்ளதுடன் இனி வரும் காலங்களில் இந் நடவடிக்கைகள் யாவும் மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினாலேயே மேற்கொள்ளப்படும் என்றும் யாழ். மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் அறிவித்துள்ளார்.

அத்துடன் புதிய சாரதி அனுமதிப்பத்திரம் (Smart Card) பெறுவதற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் கீழ் வரும் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக படிவங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

★ விபரங்களை ஆங்கில முழு (BLOCK LETTERS) எழுத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும்.

★ கறுப்பு நிறப் பேனாவை மட்டுமே கட்டாயம் பயன்படுத்தல் வேண்டும்.

★ எழுத்துக்கள் யாவும் வழங்கப்பட்டுள்ள கூடுகளில் உள்ள கோடுகளில் படாதபடி நிரப்பப்படுதல் வேண்டும்

★ பொருத்தமான விடயத்தை நிரப்பும் போது "X" போன்ற அடையாளம் இடுதல் வேண்டும்.

★ ஒருவருக்கு ஒரு விண்ணப்பப்படிவம் மட்டுமே வழங்கப்படும். அலுவலகத்தால் வழங்கப்படும் படிவத்தைத் தவிர வேறுபடிவங்கள் (போட்டோபிரதிகள்) ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

★ புதிய கடவுசீட்டுக்கு பயன்படுத்தப்படும் வர்ணத்திலான (Colour) புகைப்பட பிரதி 03 சமர்ப்பிக்கப்பட வேண்டும். (புகைப்படத்தின் பின்புறம் (Background) வெள்ளை நிறமாக இருத்தல் அவசியம்.)

★ விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் போது விண்ணப்பதாரி நேரில் சமூகம் தந்து கை விரல் அடையாளமும், கையொப்பமும் இடுதல் வேண்டும்.

★ அடையாள அட்டை பிரதி, பிறப்பு சான்றிதழ் போட்டோ பிரதி கிராம சேவகரால் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும் (மூலப் பிரதி சமர்ப்பிக்கப்பட வேண்டும்)

★ சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு ஆவணங்களிலும் திருத்தம் செய்திருத்தல் அனுமதிக்கப்படமாட்டாது. திருத்தம் உள்ள ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

★ சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்பத்திரம் மற்றும் ஆவணங்கள் தெளிவாக இருத்தல் வேண்டும்.

★ விண்ணப்பப்படிவத்தில் எந்த இடத்திலும் தேவையற்ற அடையாளங்களோ, கீறல்களோ காணப்படக்கூடாது.

★ உறுதிப்படுத்தப்பட்டு வழங்கும் அனைத்து ஆவணங்களும் 2 மாதத்துக்குள் உறுதிப்படுத்தப்பட்டவையாக இருத்தல் வேண்டும். உறுதிப்படுத்துபவரின் கையொப்பம், பதவி முத்திரை, திகதி ஆகியவற்றுடன் இருத்தல் வேண்டும்.

★ விண்ணப்பப்பத்திரத்துடன் சமர்ப்பிக்கப்படும் வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தில் கேட்கப்பட்டுள்ள விபரங்களுடன் விண்ணப்பதாரியின் குருதியின் வகை (Blood Group) கட்டாயமாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். (5)

## மேலதிக சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டோரில் ஒரு தாய் மரணம்

(திருகோணமலை)

வன்னியில் இடம்பெறும் மோதல்களினால் காயமடைந்து புல்மோட்டை வைத்தியசாலையிலிருந்து மேலதிக சிகிச்சைக்களுக்காக மன்னார் வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்ட 102 பேரில் பஞ்சலிங்கம் சுபத்திரா என்ற 39 வயது தாய் சிகிச்சை பலனின்றி நேற்று காலை மன்னார் வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரையில் ஆயிரத்து 300 பேர் வரை மன்னார் வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைகளுக்காக கொண்டுவரப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ஓ-5)

## சஞ்சிகை வெளியீடு

சொண்ட் நிறுவன அனுசரணையுடன் பிரான் பற்று ஸ்ரீ முருகன் சிறுவர் கழகத்தின் "பூஞ்சிட்டுக்கள்" எனும் சஞ்சிகை வெளியீடு கல்வி மேம்பாட்டு கழகத்தில் நாளை திங்கட்கிழமை பி.ப. 3 மணிக்கு செல்வி கீர்த்தி யோகநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி சத்தியவதனி பிரபாகரன் சிறப்பு விருந்தினராக பிரான் பற்று கிராமசேவகர் எம். தயானந்தன் கௌரவிருந்தினராக சொண்ட் நிறுவன திட்ட இணைப்பாளர் எஸ்.பிரகாஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-30)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சுதுமலை ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாத சுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு சப்பறத் திருவிழாவும், 7 ஆம் திகதி காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் 8 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் மாலை 5.30 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறவுள்ளன.


இம் முறை புதிதாக அமைக்கப் பெற்ற சப்பறத்தில் சுவாமி வீதி உலா வரவுள்ளதுடன் சப்பற வெள்ளோட்டம் எதிர்வரும் 4 ஆம் திகதி நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஓ-2)

## நிக்கொட் திட்டத்தின் கீழ் சுழற்சி முறைக்கடன்

வடமராட்சி வடக்கு பகுதியில் உள்ள 18 கிராம சேவகர் பிரிவிலும் நிக்கொட் திட்டத்தின் கீழ் மொத்தமாக 204இலட்சம் ரூபா வழங்கப்படவுள்ளதாக அண்மையில் நடைபெற்ற பருத்தித்துறைப்பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுகூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-37)




பருத்தித்துறை அருள்மிகு முதல்வி அம்பாள் ஆலயத்தில் இடம் பெற்ற ஏகாதச ருத்திர மஹா யாகத்தில் உரும்பிராய் ஆதீனகர்த்தா தாணு வாசுதேவக் குருக்கள் தலைமையில் கிரியைகள் நடைபெறு வதைக் காணலாம்.



நவாலி மகாவித்தியாலயத்தில் க.பொ. த.உயர்தர பரீட்சையில் அதிவிசேட சித்தியைப் பெற்ற மாணவி கு.யசோதாவுக்கு வலிகாமம் வலயக்கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் துவிச்சக்கரவண்டி மற்றும் சான்றிதழ் வழங்குவதையும் அருகில் வித்தியாலய அதிபர் இரா.வசந்தகுமார்,உப அதிபர் திருமதி ஜெ.குமரேச மூர்த்தி ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.




நெல்லியடி இலங்கை வங்கிக் கிளையில் ஸ்மார்ட்இன் வெஸ்ரர் கணக்கு அண்மையில் யாழ். பிராந்திய முகாமையாளர் வி.எஸ்.சிவநாதனர்ல் ஆரம்பித்து வைக்கப்பட்டு வாடிக்கையாளர் ஒருவருக்கு சான்றிதழ் வழங்கப்படு வதையும் அருகில் வங்கி உத்தியோகத்தர்கள் மற்றும் வாடிக்கையாளர்களை படத்தில் காணலாம். (படம் :-வடமராட்சி நிருபர்)



பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தின்ராகக் கலந்துகொண்ட கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசு மாணவி ஒருவருக்கு பரிசில் வழங் குவதையும் அதிபர் வெ.சண்முகநாதன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட இலங்கை வங்கி சங்கானைக் கிளை முகாமையாளர் வை.ஸ்ரீஸ்கந்தவரோதயன் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

## திரை விமர்சனம்

# அருந்ததி





சமீபமாக தமிழ் சினிமாவில் அதிகரித்து வரும் புனர் ஜென்ம கதையை உள்ளடக்கிய மற்றுமொரு திகில் படம்! எதிர்பார்ப்புக்கு உள்ளாகியிருக்கும் கதாநாயகி அனுஷ்கா இரட்டை வேடத்தில் நடித்து தெலுங்கில் சூப்பர் - டூப்பர் ஹிட் ஆன அருந்ததீ தமிழிலும் அதே பெயரில் ரீலிஸ் ஆகியுள்ளது.

கதைப்படி கந்தர்வகோட்டை சமஸ்தானத்தின் ராஜ குடும்பத்துப் பெண் அருந்ததி. வீரம், ஈரம் எல்லாவற்றிலும் சிறு வயது முதலே சிறந்து விளங்குகிறார். அவரிடம் அந்த சமஸ்தானத்தையே தன் தீய செயல்களால் ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும் அருந்ததியின் அக்காள் கணவர் பசுபதி வாலாட்டுகிறார். பசுபதியின் செயல்களால் கடும் கோபம் கொள்ளும் அருந்ததி, அவரது வாலை நறுக்கி அடக்க, ஊரே தங்களது குல தெய்வம் ஜக்கம்மாவாக அருந்ததியை வணங்குகிறது. பசுபதியை தீர்த்துக்கட்ட அருந்ததீ தன் உயிரையும் துறக்கிறாள். அடுத்தடுத்த ஜென்மத்திலும் அருந்ததி அவதரிப்பாள் என்பதை உணர்ந்து எத்தனை ஜென்மமானாலும் அருந்ததியை தீர்த்துக் கட்ட காத்துக் கொண்டிருக்கிறான் அகோரியாகி பின் அருந்ததியால் உயிரோடு சமாதி வைக்கபட்டிருக்கும் பசுபதி! அருந்ததி அவன் எதிர்பார்த்த மாதிரியே அதே குடும்பத்தின் மூன்றாவது ஜென்மத்தில் மீண்டும் பிறக்கிறாள். அருந்ததியை கந்தர்வகோட்டைக்கு வரவழைத்து பழி வாங்கத் துடிக்கிறான் பசுபதி. அருந்ததி வென்றாளா? அமானுஷ்ய சக்திகொண்ட பசுபதியைக் கொன்றாளா...? என்பது வித்தியாசமும் விறுவிறுப்பும் மிக்க மீதி கதை!



அனுஷ்கா முதல் ஜென்மத்து அருந்ததியாகவும், மூன்றாம் ஜென்மத்து அருந்ததியாகவும் இரட்டை வேட நடிப்பில் வெளுத்து வாங்கியிருக்கிறார். இப்படி, நன்றாக நடிக்கத் தெரிந்த இவரை கூடிய விரைவில் நம்மவர்கள் வேட்டைக்காரன், சிங்கம், சிறுத்தை என கவர்ச்சி வளையத்துக்குள் கட்டிப் போட இருப்பதை எண்ணி இப்பொழுதே வருத்தம் மேலோங்குகிறது நமக்கு!! பசுபதியாக வில்லன் நடிகர் சோனுஷூட் பிரமாதமாக பொருந்தி நடித்திருக்கிறார். ஜெயம் படத்திற்குப் பின் இவரது பெயர் சொல்லும் படமாக அமைந்துள்ளது அருந்ததீ. பொம்மாயி, பொம்மாயி என அவரது கொஞ்சலும், கெஞ்சலும் நம்மை குல நடுங்கச்செய்து விடுகிறது என்றால் மிகையல்ல!

இந்த இருவரைப் போன்றே மூன்றாம் ஜென்ம அருந்ததிக்கு உதவி செய்யும் மந்திரவாதி சாயாஜி ஷிண்டே, மனோரமா, சுகாஷினி, முன்னாள் கவர்ச்சி நடிகை ஜெயலலிதா மற்றும் அருந்ததியின் தாத்தா - பாட்டி, அம்மா - அப்பா, சித்தப்பா - சித்தி, அண்ணன் - தம்பி, மாமா - அத்தை என தெலுங்கு நடிகர்கள் அனைவரும் தங்களது பங்கைச் சரியாகச் செய்துள்ளனர். இவர்கள் எல்லோரையும் விட படத்தில் முக்கிய பாத்திரமாக வரும் கந்தர்வகோட்டை அரண்மனை செட், பாழடைந்த நிலையிலும், புத்தம் புதிதாக ஜொலித்த நிலையிலும் பிரமாதம்.

சுப்பர்..... பி.ரவிசங்கரின் வசனம், வாலியின் பாடல்கள், கோட்டியின் இசை, கே. செந்தில் குமாரின் ஒளிப்பதிவு, அசோக்குமாரின் கலை, ராகுல் நம்பியாரின் விஷுவல் எபெக்ட் இவை எல்லாவற்றையும் பக்க பலமாகக் கொண்டு இயக்குநர் கோடி ராமகிருஷ்ணாவின் இயக்கம் வெற்றி பெற்றுள்ளது. சபாஷ்...!

வில்லன் அகோரி ஆவது மட்டும் நான் கடவுள் ஆர்யாவை ஞாபகப்படுத்தினாலும்

அருந்ததீ - ரசிகர்களுக்கு திகில் தீ!
தயாரிப்பாளர் ராம நாராயணனுக்கு
வசூல் தீ!

# மாத்தி யோசி

பிளஸ்எஸ் ஆர் பிலிம்ஸ் சார்பில் பி.எஸ்.சேகர் ரெட்டி தயாரிக்கும் புதிய திரைப்படம் 'மாத்தி யோசி' -ஹரீஷ், அலெக்ஸ், கோபால், விசாக் ஆகிய நான்கு புதுமுகங்கள் கதையின் நாயகர்களாக அறிமுகமாக, நாயகியாக நடிக்கிறார் ஷம்மு. கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குகிறார் நந்தா பெரியசாமி. விஜய் ஆம்ஸ்ட்ராங் ஒளிப்பதிவு செய்ய, குரு கல்யாண் இசையமைப்பாளராக அறிமுக மாகிறார். படத்தைப் பற்றி நம்மிடம் பேசிய இயக்குநர் ஒவ்வொரு நாளும் பத்திரிகையைப் பார்த்தா நிறையக் குற்றங்களைச் செய்திருக்கும் சின்னப்பசங்க தலைய குனிந்து போட் டோவுக்கு போஸ் கொடுத்துவிட்டு இருப்பாங்க. இதுல சில பேர் சிரிச்சிட்டே போஸ் கொடுத்துருப் பாங்க. அப்படி தப்பு செஞ்ச சில பேரோட கதையைக் கேட்டு அதிலிருந்து உருவாக்கிய கதை தான் மாத்தி யோசி. கதையின் நாயகர்களான நான்கு பேர்களும் தமிழக கிராமத்தில் சிறு சிறு தவறுகளைச் செய்து கொண் டிருக்கும் விடலப்பசங்க. ஒருகட்டத்தில் ஊரில் மிகப் பெரியபிரச்சினை செய்துவிட, அதிலிருந்து தப்பிக்க தலை நகரான சென்னைக்கு செல்கிறார்கள். அங்கு அவர்கள் சந்திக்கும் பிரச்சினை தான் படத்தின் திரைக்கதை.


படத்தில் ஷம்முவுடன் புதுமுகங்கள்

படத்திற்காக சமீபத்தில் ஆயிரம் சிறுவர்களை வைத்து பிரம்மாண்டமான ஒரு காட்சி படமாக் கப்பட்டது. படத்தில் உள்ள நான்கு கதாநாயகர்களுக்கும், நாயகிக்கும் இடையே ஏற்படும் தொடர்பு கவிதை போல் அழகாகச் சொல்லப்பட்டிருக்கிறது என்றார்.

# வில்லியாக நடிக்கிறார் சினேகா



படையப்பா ரம்யா கிருஷ்ணன், உயிர் சங்கீதாவைத் தொடர்ந்து வில்லியாக அசத்தத் தயாராகி விட்டடார் நடிகை சினேகா. ரஜினியின் மகள் சவுந்தர்யா தயாரிப்பில் உருவாகும் படம் கோவா. இந்தப் படத்தில் நடிக்க நடிகர் ஜெய் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார். அவர் அளித்த பேட்டியொன்றில் படம் ஓடாது என்று கூறியதைத் தொடர்ந்து எழுந்த பிரச்சினையால் கோவா படப்பிடிப்புக்கு தடைவிதிக்கப்பட்டது. நடிகர் ஜெய் ஏற்கனவே நடித்துவரும் படங்களை முடித்துக் கொடுத்த பின்னரே கோவா படத்தில் நடிக்க் வேண்டும் என்றும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. இதையடுத்து சவுந்தர்யா தரப்பினர், தயாரிப்பாளர் சங்கத்திடம் முறையிட்டனர். அந்தப் பிரச்சினை குறித்துப் பேச்சுவார்த்தை நடந்து வரும் நிலையில் அடுத்த கட்ட வேலைகளில் இறங்கியிருக்கிறார் சவுந்தர்யா ரஜனி. படத்தில் முக்கிய கேரக்டரில் நடிகை சினேகா ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். படையப்பா ரம்யாகிருஷ்ணன் போல இந்தப் படத்தில் சினோகவின் கேரக்டர் பேசப்படுமாம். விரைவில் கோவா படப்பிடிப்பு துவங்கும் என்று சவுந்தர்யா தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

# சமர்த்து சிம்பு



தனது திரையுலக வரலாற்றிலேயே முதன் முறையாக இயக்குநர் சொல்வதை மட்டும் கேட்டு, அவருடைய பணிகளில் தலையிடாமல் "விண்ணைத் தாண்டி வருவாயா" படத்தில் சமர்த்தாக நடித்து வருகிறாராம் சிம்பு. சிம்பு என்றால் வம்பு என்று கூறும் அளவுக்கு அவரைப் பற்றி நிறையச் செய்திகள் வந்துவிட்டன. அப்படி ஆகிவிட்டது நிலைமை. ஆனால், முதன் முறையாக சமர்த்தா நடிக்கிறார் சிம்பு என விண்ணைத் தாண்டி வருவாயா யூனிட்டார் நற்சான்றிதழ் கொடுத்துள்ளனர்.

இயக்குநர் சொல்வதை மட்டும் கேட்டு நடிக்கிறார். அவருடைய எந்தப் பணியிலும் தலையிடுவதில்லை. சமர்த்தாக நடித்துக் கொண்டிருக்கிறார் என்கிறார்கள் யூனிட் வட்டாரத்தினர்.

இப்படத்தில் திரிஷாவுடன் ஜோடி சேருகிறார் சிம்பு. அலை படத்திற்குப் பின்னர் இருவரும் இணையும் படம். தற்போது கேரள மாநிலம் ஆலப்புழையில் ஷூட்டிங் நடந்து வருகிறது.

பத்து நாட்கள் அங்கு படப்பிடிப்பு நடக்கிறதாம். கமலஹாசனின் வேட்டையாடு விளையாடு படத்திற்காக இங்கு வந்திருந்தார் கௌதம். அதன் பின்னர் இந்த இடம் அவருக்கு மிகவும் பிடித்துப் போகவே தொடர்ந்து ஆலப்புழையில் சில காட்சிகளை வைக்க ஆரம்பித்துள்ளார் கௌதம். "வேட்டையாடு விளையாடு" மற்றும் "வாரணம் ஆயிரம்" படத்தின் சில காட்சிகளை இங்கு எடுத்துள்ளார் கௌதம் மேனன். தற்போது இதுவரை இந்திய சினிமா எதிலும் வராத சில அழகிய லொகேஷன்களில் பாடல் காட்சி ஒன்றையும் சில படக்காட்சிகளையும் இங்கு படமாக்கி வருகிறாராம் கௌதம். ஒஸ்கார் நாயகன் ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைக்கிறார். படம் வேகமாக வளர்ந்து வருகிறது. ஜூலை மாதம் ரிலீஸ் செய்யத் திட்டமிட்டுள்ளாராம்.

# சந்திரமுகி கேரக்டரில் நடிக்கிறார் சந்தியா



தமிழில் சந்திரமுகியாக வெளியாகி செம ஹிட் ஆன ஆப்தமித்ரா இரண்டாம் பாகம் படத்தை எடுக்கும் பணிகளில் டைரக்டர் பி.வாசு தீவிரமாக இறங்கிவிட்டார். இந்தப் படத்துக்கு ஆப்த ரட்ஷகா எனப் பெயரிட்டுள்ள வாசு படத்தில் சந்திரமுகி கேரக்டரில் நடிக்க நடிகை சினேகாவை அழைத்தார். முதலில் ஓ.கே. சொன்ன சினேகா, கால்ஷீட் பிரச்சினைகளால் ஆப்தரட்ஷகா படத்தில் நடிக்க மறுத்துவிட்டார். இதனால் அந்த கேரக்டரில் யாரை நடிக்க வைக்கலாம் என் யோசித்த வாசுவின் மனதில் தோன்றியவர் நடிகை சந்தியா. உடனடியாக சந்தியாவுக்கு போன் போட்டு கேட்க... உற்சாகத்தில் டபுள் ஓ.கே. சொல்லிவிட்டாராம் சந்தியா. இந்தப் படத்தில் சந்தியா தவிர, விமலா ராமன், கன்னட பாவனாவும் ஆகியோரும் முக்கிய கேரக்டரில் நடிக்கிறார்களாம். தற்போது பழனி சுற்றுவட்டாரப் பகுதியில் ஆப்த ரட்ஷகா பட சூட்டிங் நடந்து வருகிறது.

# அடடா என்ன அழகு

தயாரிப்பு: அலிப்பிரி மூளி புரொடக்ஷனஸ்
நட்சத்திரங்கள்: ஆகாஷ்ஜெய், கருணாஸ், ரகுவரன், சரத்பாபு, ஆசிஷ் வித்யார்த்தி, நிக்கோல், ஐஸ்வர்யா, ரேகா மற்றும் பலர்
கதை திரைக்கதை, வசனம், பாடல்கள்
இயக்கம்: டி.எம.ஜெயமுருகன்

*வழக்கமான காதல் கதை*

மருத்துவம் படிக்கும் நாயகனுக்கு இசை மீது தீரா காதல். நாயகனின் இசையார்வத்திற்கு தன் மனதை பறிக்கொடுக்கிறாள் உடன் மருத்துவம் படிக்கும் நாயகி இருவரும் மனதாரக் காதலிக்கி றார்கள். வழக்கம் போல் காதலுக்கு எதிர்ப்பு வரு கிறது. இருவரும் தப்பித்துச் செல்லும்போது நாயகிக்கு விபத்து ஏற்படுகிறது. விபத்தில் நாயகி சுய நினை விழக்கிறார். அவரை தன்னுடைய காதலாலும் இசையாலும் மீட்டெடுக்கிறார் நாயகன். ஆனால் நாயகனுக்கு திருமணம் செய்து தர மறுக்கிறார் நாயகியின் தந்தை. காரணம் அவர் மத்திய அமைச்சர். நாயகன் மருத்துவர். அந்தஸ்து முரண்பாடால் திருமணம் தடைப் படுகிறது. பின் இந்தக் காதல் ஜோடி இணைந்ததா? இல்லையா என்பதைப் பழைய சினிமாப் பாணியில் சொல்லியிருக்கிறார்கள்.




நாயகனும் நாயகியும் எம் மாதிரியான மருத்துவர்கள் என்பதை விளக்கும்படியான காட்சியமைப்பு திரைக்கதையில் எங்கும் இல்லை. நாயகனுக்கு முகத்தில் இளமை மிஸ்ஸிங். நாயகியின் முகத்தில் எப்போதும் மென் சோகம் இழையோடுகிறது. இருந்தாலும் தன்னால் முடிந்தவரை இயக்குநரின் வக்ரமான திரைக் கதைக்கு ஆடைக் குறைப்பு செய்திருக்கிறார். காதல் கதைக்கு பாடல்களும் அதற்குரிய கிளாமரான காட்சியமைப்பகளும் போதுமென இயக்குநர் நினைத்திருக்கிறார் போலும். முதல் பாதியில் சிரிக்கும் படியான காமடி காட்சிகளும் பின் பாதியில் அழுத்த மான காதல் காட்சியமைப் புகளும் இடம்பெறாதாது குறை. பாடல்கள் கேட்கும்படி இருக்கின்றன. சிச்சாசின் ஒளிப் பதிவில் ஊட்டி அழகாகத் தெரிகிறது. சாரத்பாபு, ஆசிஷ் வித்தியார்த்தி, ஐஸ்வர்யா, ரேகா தங்களுக்கு வழாங்கப்பட்ட பாத்திரங்களில் நிறைவாக நடித்திருக்கிறார்கள் புதுமுக நடிகை நிக்கோவிடம் இளமை இருக்கிறது.

இளமை மட்டுமேயிருக்கிறது. நாயகன் ஆகாஷ் ஜெய் நடிப்பதற்கு கிடைத்த ஒரு சில வாய்ப்பை பயன்படுத்தியிருக்கிறார்.

## திரை விமர்சனம்

அடடா என்ன அழகு–டைட்டில் மட்டுமே கவிதை

# கரப்பந்தாட்டப் போட்டியில் சென்ஜேம்ஸ் சம்பியனானது

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தினால் நடாத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியின் முதல் பிரிவில் ஊர்காவற்றுறை சென் ஜேம்ஸ் விளையாட்டுக் கழகமும் எழுவை தீவு பற்றிமா விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

இதில் சென் ஜேம்ஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தெரிவானது.

இரண்டாவது போட்டி அனலைதீவு அருணோதய விளை யாட்டுக்கழகத்திற்கும் ஊர்காவற் றுறை ஞான ஒளிவிளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் இடம் பெற்றது.

இப் போட்டியில் ஞான ஒளி வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்குத் தெரிவானது. ஊர்காவற்றுறை சென் ஜேம்ஸ் விளையாட்டுக் கழகமும் ஊர். ஞான ஒளி விளையாட்டுக்கழகமும் இறுதிப் போட்டியில் மோதிக்கொண்டன. அதில் ஊர் .சென் ஜேம்ஸ் பெண்கள் அணி வெற்றிபெற்றுசம்பியனானது. (ஓ-72)

# சதுர்த்தி உற்சவம்

சித்தன் கேணி ஸ்ரீ மகா கணபதிப் பிள்ளையார் ஆலய பங்குனி மாத சதுர்த்தி உற்சவம் நாளை 3 .30 மணிக்கு அபிஷேகம் பூசை என்பன இடம்பெற்று சுவாமி வலம் வருதலுடன் நிறைவு பெறும். (ஓ-30)

# உதைபந்தாட்ட போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மக்கள் வசந்த எழுச்சிப் பேரவை நடத்தும் உதை பந்தாட்டப் போட்டிகள் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் இன்று பிற்பகல் 3 மணிக்கு யூனியன் வி.க. எதிர் பல்கலைக்கழக உடற்கல்வி அணியும், பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும் போட்டியில் சென். நீக்கிலஸ் வி.க எதிர் மணற்காடு சென் அன்ரனிஸ் வி. கழகமும் மோதவுள்ளன.

நாளை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும் போட்டியில் பாடும் மீன் வி.க. எதிர் மனோகரா வி. கழகமும், பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் போட்டியில் யங்கென்றிஸ் வி.க எதிர் டயமண்ட் வி.கழகமும் மோதவுள்ளன. (ஓ-6)

# துறைமுகங்களிலிருந்து பொருட்களை இறக்கி ஏற்றும் பாரவூர்திகளுக்கான புதிய கொடுப்பனவு நிர்ணயம்

(யாழ்ப்பாணம்)

கப்பலில் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரும் பொருட்களை காங்கேசன் துறை, மயிலிட்டி துறைமுகங்களிலிருந்து ஏற்றி இறக்கும் பாரவூர்திகளுக்கான புதிய கொடுப்பனவு யாழ் அரச அதிபரால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து யாழ் அரச அதிபர் க. கணேஷினால் யாழ் மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்துக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதாவது,

நிலையான கட்டணம் -6 ஆயிரத்து 400 ரூபா ( 10 மெற் றிக் தொன் பாரவூர்தி / 10கிலோ மீற்றர் தூரம் -இது பொருட்களை ஏற்றுவதற்காக தெல்லிப்பளையில் இருந்து துறைமுகத்திற்கு சென்று திரும்பும் வரையான 5 கிலோ மீற்றர் தூரத்திற்கான இரு வழிக் கட்டணத்தையும் உள்ளடக்கி யது)

மேலதிகமாகப் பயணம் செய்யும் ஒவ்வொரு கிலோ மீற்ற ருக்கும் (ஒரு வழிக்கட்டணம்) 11 தொடக்கம் 40 கிலோ மீற்றர் வரை 31 ரூபா , 41 தொடக்கம் 61 கிலோ மீற்றர் வரை ரூபா 36 61 கிலோ மீற்றருக்கு மேல் ரூபா 40.

பாரவூர்த்திகளுக்கான தாமதக் கட் டணம் பொருட்களை ஏற்றி இறக்குவதற்காக துறைமுகத்திற்குள் பாரவூர்திகள் உட்சென்ற நேரத்தில் இருந்து களஞ்சியத்தில் பொருட்களை இறக்கும் வரையான நேரத்தில் பூர்த்தியடைந்த 48 மணித்தியாலங்களின் பின் தாமதமாகும் ஒவ்வொரு 24 மணித்தியாலங்கள் முடிவிலும் தாமதக் கட்டணமாக ரூபா 500 வீதம் வழங்கப்படும்.

பாரவூர்திகளின் கட்டணம் நிர்ணயம் செய்யப்படும் போது பாரவூர்திகள் தெல்லிப்பளையில் இருந்து புறப்பட்டு மீண்டும் தெல்லிப்பளை திரும்பும் வரையான தூரத்தின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்படும் (சென்று திரும்பும் தூரம் ) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ)




COM BANK e Exchange மூலம் வெளிநாட்டிலிருந்து பணத்தை பெறுவித்து

ரூ.12 இலட்சம் பணப் பரிசில்களை வெல்லுங்கள்!

டிசெம்பர் மாதம் முதல் எதிர்வரும் ஏப்பிரல் 2009 வரை
மாதாந்தம் 3 வெற்றியாளர்களுக்கு தலா ரூ.100,000/-
இன்றே COM BANK e Exchange மூலமாக பணத்தை அனுப்பும்படி வெளிநாட்டிலுள்ள உங்கள் உறவினர், நண்பர்களுக்கு அறிவியுங்கள். COM BANK e Exchange அதிவிரைவானது, நம்பிக்கையானது, இலங்கையின் எப்பகுதியிலும் பணத்தை இலகுவாகப் பெற்றுக்கொள்ளமுடியும்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 011 5 667 679, 011 2 353 353

COMBANK e Exchange MONEY TRANSFER

கொமர்ஷல் வங்கி

# தொழில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கனேடிய உலகப் பல்கலைக் கழக சேவை நிறுவனத்துடன் அறவழிப் போராட்டக் குழு இணைந்த நடத்திய தொழில் பயிற்சி நெறிகளின் பயிற்சியாளர்களுக்கான தொழில் உபகரணங்கள் வழங்கும் வைபவம் எதிர்வரும் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைமுற்பகல் 10.30 மணிக்கு அறவழி தொழில் பயிலகத்தில் அறவழிப் போராட்டக் குழுத் தலைவர் வி. ஸ்ரீசத்திவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய தலைவர் சீ.வி.கே. சிவஞானம், சிறப்பு விருந்தினராக சர்வோதயம் மாவட்ட இணைப்பாளர் ஏ.கே. சிவசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-6)

# இலவச முறிவு நெரிவு வைத்திய சேவை

(யாழ்ப்பாணம்)

ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி எனும் முகவரியில் அமைந்துள்ள மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலைக்கு பரம்பரை முறிவு நெரிவு வைத்தியர் நியமிக்கப்பட்டு தினமும் காலை தொடக்கம் நண்பகல் வரை இலவச முறிவு நெரிவு வைத்திய சேவை நடைபெற்று வருவதாக மருத்தவ பொறுப்பதிகாரி டாக்கடர் திருமதி அ.கிருஷ்ணானந்தம் தெரிவித்தள்ளார். (ஓ-6)

# புதிய வாகனசாலை நிர்மாணம்

(பொன்னாலை)

அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் அலயத்துக்கு புதிய வாகனசாலை ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

ஊள்ளூர் அடியார்கள் மற்றும் ,வெளியூர் அடியவர்களின் நிதி அன்பளிப்புடனும், ஆலய பரிபால சபையின் நிதியுதவியுடனும் மேற்படி வாகனசாலை நிர்மாணிக்கப்பட்டு வருவதாக பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

மேற்படி ஆலயத்துக்கு விரைவில் இராஜகோபுரம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-49)

# தேசிய பாடசாலை பட்டதாரி ஆசிரியர் நியமனம்; நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

தேசியப் பாடசாலை பட்டதாரி ஆசிரியர் நியமனத்திற்கான நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவானோரில் மேலும் ஒரு தொகுதியினரின் பெயர் விபரங்கள் வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதியும், அழைப்புக் கடிதங்களும் உரியவர்களின் தனிப்பட்ட முகவரிக்கு விரைவில் அனுப்பிவைக்கப்படவுள்ளதாக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா தெரிவித்துள்ளார்.

அத்துடன் நேர்முகப் பரீட்சையின் போது பின்வரும் ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

◆ அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தேசிய அடையாள அட்டை அல்லது புகைப்படம் கொண்ட வேறெதும் அங்கீகரிக்கக் கூடிய உறுதிசெய்யப்பட்ட ஆவணம்.

◆ பிறப்புச் சான்றிதழ்–பிறப்புச் சான்றிதழ் பெயரில் ஏதாவது மாற்றம் இருப்பின் சத்தியக் கடதாசியும் திரு மணத்தின் பின்னர் பெயர் மாற்றப்பட்டிருப் பின் திருமணச் சான்றிதழ் அவசியமாகும்.

◆ க.பொ.த.(சா/த) மற்றும் க.பொ.த(உ/த) சான்றிதழ்.

◆ பட்டச்சான்றிதழ் (பாடவிதானம்) மற்றும் ஆங்கில மொழி மூலம் பட்டப்படிப்பைத் தொடர்ந்திருப்பின் அதனை உறுதி செய்வதற்கான கடிதம்.

◆ 2007.02.19 ஆம் திகதி கொண்ட பத்திரிகை அறிவித்தலுக்கமைய பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட 39 பேரின் பெயர் விபரம் வருமாறு,

ஆர்.மைதிலி, எஸ்.சந்திரசேகரம், என்.செல்வக்குமார், ஆர்.சந்திரிக்கா, ஜி.ஞானப்பிரகாசம், கே. உதயசீலன், பி.ராஜரஞ்சினி, ரி.ராஜகுமார், எஸ்.சுந்தரலிங்கம், ஆர்.பொன்னம்பலம், ர.அஜேந்திரன், எஸ்.தவசீலன், எம்.அருள்ராஜ், எ.சந்திரிக்கா, எஸ்.கிருபாகரன், ஜெ.ஜெயரட்ணம், பி.குகநாதன், ஜெ.ஜெயநேசன், என்.வாகீசன், பி.மதன்மோகன், எஸ்.ஸ்ரீகந்தசேகரம், என்.ஜெயரூபன், எஸ்.மயூரதி, ஜெ.ஜெகநீதன், ரி.ஞானநாதன், எல்.சியாமளா, ஈ.வாகீசன், எஸ்.இளங்குமரன், ரி.கிருசாந்தி, எம்.மணிவண்ணன், எஸ்.இளகில்முத்தழவன், ரி.முகுந்தன், பி.சுரேந்திரன், கே.சுதர்சினி, எஸ்.பத்மநாதன், எ.அச்சுதன், வி.ரசரட்ணம், எ.எஸ்.சி.சாமிளா, எஸ்.நேதாஜி. (6)

## நூலகத்திற்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளல்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறையில் உள்ள பொது நூலகத்திற்கு பாடசாலை மாணவர்களை இணைத்துக்கொள்ள வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம் நடவடிக்கைகளை எடுத்து வருவதாக நகராட்சி மன்றச் செயலாளர் கு.அமிர்தலிங்கம் தெரிவித்தார். நகராட்சி மன்ற எல்லைப் பரப்புக்குள் உள்ள பாடசாலை மாணவர்கள் இதில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் இந் நடவடிக்கைகளில் நூலக தொடர்புக்குழு மற்றும் உத்தியோகத்தர்கள் ஈடுபட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ-10)

## யாழில் பொருட்களின் விலைகள் பெருமளவு வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் ஏ-9 வீதியினூடாக தனியார் துறையினரும் பொருட்களை எடுத்து வர அரசாங்கத்தினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளமையால் யாழ். மாவட்டத்தில் பொருட்களின் விலையில் பெருமளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை உப உணவுப் பொருட்கள், மென்பானங்கள் மருந்து வகைகள், பிஸ்கற் வகைகள் உட்பட பலதரப் பட்ட பொருட்கள் 18 லொறிகளில் எடுத்துவரப்பட்டமையால் 3 வருடகால இடைவெளிக்குப் பின்னர் பொருட்களின் விலைகளில் 40 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதேவேளை ஏ-9வீதியூடாக யாழ்.மாவட்டத்துக்கு பொருட்களை எடுத்துவர நூற்றுக்கணக்கான வர்த்தகர்கள் விண்ணப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புத்தாண்டினை முன்னிட்டு 100 லொறிகளில் வட பகுதிக்கு பொருடகளை எடுத்துச் செல்ல அரசாங்கம் அனுமதி வழங்கவிருக்கிறது. (ஓ-4)

# வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டி முடிவுகள்

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற வலய மட்ட பெருவிளையாட்டுக்களில் வெற்றிபெற்ற அணிகளின் விபரம் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற அணிகளின் விபரம் வருமாறு,

**பூப்பந்து**

*19 வயதின் கீழ் ஆண்கள்*

மானிப்பாய் இந்துக் கல்லூரி, வயாவிளான் ம.ம.வி, யூனியன் கல்லூரி.

*19 வயதின் கீழ் பெண்கள்*

உடுவில் மான்ஸ் ம.வி., உடுவில் மகளிர் கல்லூரி, இராமநாதன் கல்லூரி.

**மேசைப்பந்து**

*19 வயதின் கீழ் ஆண்கள்*

யூனியன் கல்லூரி, அருனோதயாக் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி.

*19 வயதின் கீழ் பெண்கள்*

யூனியன் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, அருணோதயாக் கல்லூரி.

**மென்பந்து துடுப்பாட்டம்**

*19 வயதின் கீழ்ப் பிரிவு ஆண்*

மகாஜனர்க் கல்லூரி, விக்றோரியாக் கல்லூரி, ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

**வலைப்பந்து**

*15 வயதின் கீழ் பெண்கள்*

யூனியன் கல்லூரி, பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தி, பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை.

*17 வயதின் கீழ் பெண்கள்*

யூனியன் கல்லூரி, அராலி சரஸ்வதி வித்தி, இராமநாதன் கல்லூரி.

*19 வயதின் கீழ் பெண்கள்*

யூனியன் கல்லூரி, இராமநாதன் கல்லூரி, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

**கரப்பந்து பெண்கள்**

*15 வயதின் கீழ்*

அருணாசலம் வித்தி, அருணோதயாக் கல்லூரி, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

*17 வயதின் கீழ்*

மகாஜனாக் கல்லூரி, சங்கானை சிவப்பிரகாச வித்தி, பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை.

*19 வயதின் கீழ்*

சங்கானை சிவப்பிரகாச வித்தி, மகாஜனாக் கல்லூரி,, பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப்பாடசாலை.

**கரப்பந்து ஆண்கள்**

*15 வயதின் கீழ்*

அருணாசலம் வித்தி, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, மல்லாகம் ம.வித்தி.

*17 வயதின் கீழ்*

இளவாலை மெய்கண்டான் ம.வி., அருணாசலம் வித்தி, மானிப்பாய் இந்துக் கல்லூரி.

*19 வயதின் கீழ்*

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, இளவாலை மெய்கண்டான் ம.வி.

**எல்லே**

*19 வயதின் கீழ் ஆண்கள்*

அருணோதயாக் கல்லூரி, இணுவில் மத்திய கல்லூரி, வயாவிளான் ம.ம.வி.,

*19 வயதின் கீழ் பெண்கள்*

அருணோதயாக் கல்லூரி, குளமங்கால் RCTMS, மானிப்பாய் மகளிர் கல்லூரி.

**கூடைப்பந்தாட்டம்**

*19 வயதின் கீழ் ஆண்கள்*

யாழ்ப்பாணக் கல்லூரி, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

*19 வயதின் கீழ் பெண்கள்*

உடுவில் மகளிர் கல்லூரி, இராமநாதன் கல்லூரி, பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாட.

**சதுரங்கம்**

*15 வயதின் கீழ் ஆண்கள்*

மகாஜனாக் கல்லூரி, யூனியன் கல்லூரி, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

*15 வயதின் கீழ் பெண்கள்*

மகாஜனாக் கல்லூரி, யூனியன் கல்லூரி, சுதுமலை வடக்கு அ.மி.த.க.பா.

*19 வயதின் கீழ் ஆண்கள்*

வயாவிளான் ம.ம.வி, மகாஜனாக் கல்லூரி, மல்லாகம் ம.வி,

*19 வயதின் கீழ் பெண்கள்*

மகாஜனாக் கல்லூரி, சுதுமலை வடக்கு அ.மி.த.க.பா, அருணோதயாக் கல்லூரி.

**கபடி**

*19 வயதின் கீழ் ஆண்கள்*

இளவாலை மெய்கண்டான் ம.வி, இணுவில் மத்திய கல்லூரி, வயாவிளான் ம.ம.வி. (ஓ-6)

# இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளிலிருந்து 2108 பேர் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வருகை

## தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளிலிருந்து 2 ஆயிரத்து 108 பொது மக்கள் கடந்த வியாழக்கிழமை அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கி வந்துள்ளனர் என்று தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது. இந்நிலையில் சுமார் 58 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வந்துள்ளனர்.

இதேவேளை வன்னியிலிருந்து தப்பி வரும் பொதுமக்களைத் தங்க வைப்பதற்காக யாழ்ப்பாணத்தில் 6 புதிய நலன்புரி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் இதுவரை சுமார் 5 ஆயிரத்து 118 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் ஊடக நிலையம் தெரிவித்தது.

இதுதொடர்பில் ஊடக மத்திய நிலையம் மேலும் கூறியுள்ளதாவது,


முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பகுதியிலுள்ள இராணுவத்தின் 58 ஆவது படையணியினரிடமே கடந்த வியாழக்கிழமை மேற்படி பொதுமக்கள் தஞ்சமடைந்துள்ளனர். இவ்வாறு வந்துள்ள பொதுமக்களில் 940 சிறுவர்கள், 597 பெண்கள் மற்றும் 571 ஆண்கள் உள்ளடங்குகின்றனர்.

இம் மக்கள் கிளிநொச்சியில் அமைக்கப்பட்டுள்ள இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுக்குத் தேவையான உணவு மற்றும் சுகாதார வசதிகள் அனைத்தும் படைத்தரப்பினரால் வழங்கப்பட்டு வருகின்றது.

பின்னர் இம் மக்களை வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக நலன்புரி நிலையங்களில் தங்கவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் உள்ள முகாம்களில் எதிர்வரும் நாட்களில் மேலும் பலரை தங்கவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை அனர்த்த நிவாரண அமைச்சு எடுத்துள்ளது. (ஓ-5)



பௌராணிகரும் ஓய்வுபெற்ற கிராமிய வங்கியாளருமாகிய ச.க.முருகையாவின் சமூக, சமயப் பணிகளைப் பாராட்டித் "திருப்பணிச் செம்மல்" என்ற விருதளிக்கும் நிகழ்வு நீர்வேலி ஸ்ரீ கணேச முன்பள்ளி மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்குத் தலைமை தாங்கிய நீர்வைமணி கு.தியாகராஜக் குருக்கள், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மக்கள் வங்கியின் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் க.ஆனந்தராஜா, விழாநாயகர் ச.க.முருகையா ஆகியோர் உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்துகொண்டோருள் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.



**Lifeline**

# மீண்டும் வாழ்வோம்

இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான தகவல் பரிமாற்றம்

Humanitarian Information For IDPs

# "ஏவப்படும் எறிகணைகளால் அப்பாவி பொதுமக்கள் கொல்லப்படுகின்றார்கள்"

## இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ரோபர்ட் பிளேக்



இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ரோபர்ட் பிளேக்

இலங்கையில் அமெரிக்காவினால் முன்னெடுக்கப்படும் மனிதாபிமானப் பணிகள் குறித்து அறிந்து கொள்ளும் நோக்கில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ரோபர்ட் பிளேக்கை நேர் கண்டுள்ளோம்.

*இலங்கையில் அமெரிக்காவின் உபாயகரமான இலக்குகள் யாவை?*

சமாதானத்தை எட்டுவதன் மூலம் இந்த நாட்டில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதுடன் மோதல், மனித உரிமைகள் மற்றும் மனித நேயப் பிரச்சினைகள் உட்பட அனைத்துப் பிரச்சினைகளையும் குறைத்து விடலாம். இதன்மூலம் பிராந்தியத்தில் உள்ள அபிவிருத்தியடைந்த மிதவாத நாடுகளின் இடத்திலே இலங்கையையும் சேர்க்க முடியும். மோதலின் பிடியிலிருந்து இந்த நாட்டை விடுவிக்கும் போது அது தனக்கேயுரிய இடத்தைப் பிராந்தியத்தில் பெற்றுக் கொண்டு அளப்பரிய வாய்ப்புகளையும் அடைந்து கொள்ளும்.

*அந்த இலக்குகளை அடைய உங்களிடம் என்ன பொறி முறைகள் உள்ளன. மேலும் புதிய அரசாங்கத்தின் கொள்கைகளில் ஏதாவது மாற்றங்கள் ஏற்படுமா?*

சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவரின் கீழ் நாம் பல முக்கியமான நிகழ்ச்சித் திட்டங்களைக் கொண்டுள்ளோம். உள்நாட்டில் இடம் பெயர்ந்துள்ள வன்னி மக்களுக்கு உணவையும் உதவியையும் வழங்கும் பாரிய கொடையாளரான இம் முகவர் நிறுவனம் மோதல் சூழ்நிலைகளுக்கு மட்டும் பதிற் செயற்பாடாற்றாமல் இலங்கையின் முக்கியமான பாகமாகிய கிழக்கில் உறுதிப்பாட்டையும் அபிவிருத்தியையும் ஏற்படுத்தவும் பணியாற்றுகின்றது. இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்குவதற்காகத் தனியார் துறையினரின் புதிய முயற்சிகளுக்கு ஊக்கமளிப்பதில் நாம் ஈடுபட்டுள்ளோம். இதனால் இளைஞர்கள் வன்முறைகளில் தஞ்சமடையவோ துணை இராணுவப்படைகளில் சேரவோ எண்ணமாட்டார்கள். T.M.V.P. மற்றும் ஏனையோர் பூரணமாகச் சிறுவர்களை விடுவிப்பதற்காக ஊக்குவிப்புகளை மேற்கொள்வதற்காக சிறுவர் படைவீரர்கள் எனும் விடயத்தினையும் நாம் கையாண்டு வருகின்றோம். இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் சுயாதீனமான ஊடகம் மற்றும் சிவில் சமூகம் வளர்வதற்கு உதவுவதன் மூலம் அப்பிரதேசத்தில் நல்லாட்சியை மேம்படுத்த நாம் உழைக்கின்றோம்.

*கிழக்கு மாகாண இளைஞர்களுக்கு என்ன விதமான தொழில் அல்லது பயிற்சியினை வழங்க உத்தேசித்துள்ளீர்கள்?*

நீங்கள் குறிப்பிட்டது போல இளைஞர்களுக்கு வாய்ப்புகளை உருவாக்கித் தொழில் வழங்குவது மிக முக்கியமானதாகும். அதனைச் செய்வதற்கான சிறந்த வழி, தனியார் துறைச் செயற்பாடுகள் மூலம் முயற்சிப்பதேயன்றி, அரசாங்கத் தொழில் மூலமாக அல்ல. இதனால் நாம் அரச, தனியார் பங்காண்மை நிதியத்தினை ஆரம்பித்து தனியார் துறைக் கம்பனிகளுடன் பங்காண்மை அமைப்போம். இலங்கையின் தனியார் துறைக் கம்பனிகளும் எதிர்காலத்தில் வெளிநாட்டுக் கம்பனிகளும் புதிய தொழில் வாய்ப்புகளை வழங்கும். எம்முடன் பங்காண்மையினை உருவாக்குவதன் மூலம் எமக்கு கொழும்பிலுள்ள பல அமைச்சுக்களுடனும் உள்ள தொடர்பினை அவர்கள் சாதகமாகப் பயன்படுத்தி ஏதாவது பிரச்சினைகள் இருப்பின் அவற்றைத் தீர்க்க அதனைப் பயன்படுத்த முடியும்.

**இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்குவதற்காகத் தனியார்துறையினரின் புதிய முயற்சிகளுக்கு ஊக்கமளிப்பதில் நாம் ஈடுபட்டுள்ளோம். இதனால் இளைஞர்கள் வன்முறைகளில் தஞ்சமடையவோ துணை இராணுவப் படைகளில் சேரவோ எண்ணமாட்டார்கள்.**

*இலங்கையின் வடக்கு, கிழக்கிலுள்ள மனிதநேய நெருக்கடிகளை எந்த அளவுக்கு விசேடமாக அமெரிக்க அரசாங்கம் தீர்க்க முயற்சிக்கும்? இடம் பெயர்ந்த குடும்பங்களைப் பொறுத்தளவில் உங்களின் திட்டங்கள் என்ன?*

ஏவப்படுகின்றஎறிகணைகளினால் அப்பாவி மக்கள் கொல்லப்படுவதுடன் பல நூற்றுக்கணக்கானோர் காயப்படுகின்றனர். கடந்த வாரத்தில் மட்டும் நூற்றுக் கணக்கான பொதுமக்கள் காயமடைந்துள்ளனர் என்ற செய்தி மிகுந்த வலியினை ஏற்படுத்துகின்றது.

இதுதான் எமது அடிப்படைக் கரிசனையாகும். அரசாங்கம், ஐ.நா., ஐ.சி.ஆர்.சி போன்றோருடன் நாம் பணியாற்றி போதியளவு உணவும் மருந்தும் இடம் பெயர்ந்தோருக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவது எமது இரண்டாவது கரிசனையாகும். அம் மக்களில் பலர் பல தடவைகள் இடம் பெயர்ந்தவர்கள். அவர்கள் உயிர்வாழ்வதற்கு முற்று முழுவதும் புற உதவிகளிலேயே தங்கியுள்ளனர். உணவுத் தட்டுப்பாடும், பாரதூரமான மருந்துத் தட்டுப்பாடும் அங்கே இருப்பதாக அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.

மருந்துத் தட்டுப்பாட்டின் காரணமாகப் பாதுகாப்பு வலயத்தினுள் இறப்பு விகிதம் மிகவும் உயர்வாகக் கணாப்படுகின்றது. வவுனியாவிலுள்ள முகாம்கள் சர்வதேச தரத்தில் நிர்வகிக்கப்படுகின்றன என்பதை உறுதி செய்வதற்கு நாம் தெற்கிலே அரசாங்கத்துடனும், ஐ.நாவுடனும், ஐ.சி.ஆர்.சி.யுடனும் பணியாற்றி வருகின்றோம் என்றார்.

"மீண்டும் வாழ்வோம்" நிகழ்ச்சியானது சூரியன் எவ்.எம் வானொலியூடாக தின மும் இரவு 9.00 மணி முதல் 10.00 மணி வரையும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் தேசிய சேவையில் திங்கள் முதல் வெள்ளி வரை இரவு 9.30 மணிமுதல் 9.45 மணி வரையும் ஒலிபரப்பாகின்றது. எமது நிகழ்ச்சி ஒலிப்பதிவுகளை (WWW. Internews. lk) என்ற இணையத்தளத்திலும் தரவிறக்கம் செய்யலாம்.

# வவுனியாவில் இடம்பெயர்ந்த மக்களை சந்தித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

வன்னியிலிருந்து நாளாந்தம் மக்கள் இடம்பெயர்ந்து வவுனியா நோக்கி வருகை தருகின்றனர். அவ்வாறு வருகை தருவோர் வவுனியாவிலுள்ள நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டு வருகின்றனர். இந்நிலையில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சர் டக்ளஸ் தேவனாந்தா வவுனியா நலன்புரி முகாம்களுக்கு விஜயமொன்றை மேற்கொண்டு இடம்பெயர்ந்த மக்களைச் சந்தித்துள்ளார். இச்சந்திப்பின் போது முகாம் மக்கள் தமது வருகை குறித்து எதிர்பார்ப்புடன் இருந்ததாகவும் உரிமையுடன் உரையாற்றியதாகவும் அமைச்சர் மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

இவ்விஜயம் குறித்தும் அங்குள்ள மக்களின் நிலைவரம் குறித்தும் அவர் கருத்துரைக்கையில், எதிர்கால வாழக்கைக்கான உத்தரவாதம் அவர்களுக்குக் கிடைத்திருப்பதாகவும்இயல்பான சில குறைபாடுகள் இருக்கின்றன எனவும் அவற்றை விரைவில் தாம் நிவர்த்தி செய்யவிருப்பதாகவும் ஆயிரக்கணக்கான மக்களை வைத்துப் பராமரிப்பது என்பது இலகுவான காரியமல்ல. இருந்தாலும் அரசாங்கம் தன்னாலான முழு முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றது எனவும் தெரிவித்தார்.



இடம்பெயர்ந்த மக்களை சந்தித்து உரையாடும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

வவுனியாவில் இடம்பெயர்ந்துள்ள மக்களின் நலன்புரி செயற்றிட்டங்கள் குறித்து அமைச்சர், ஜனாதிபதி அவர்களுடனும், அவருடைய ஆலோசகர் பசில் ராஜ பக்ஷ, மீள்குடியேற்ற மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ரிஷாட் பதியுதீன் மற்றும் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய அவர்களுடனும் வவுனியா விஜயத்திற்கு முன்னர் கலந்துரையாடிள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதியவர்களுடைய பிரச்சினைகள், அங்கவீனர்கள் தொடர்பான பிரச்சினைகள், கணவரை இழந்தவர்களுடைய பிரச்சினைகள் ஆகியவற்றைக் கவனமெடுத்து உளவள ஆலோசனை மூலம் அவர்களுக்கு ஊக்கத்தைக் கொடுக்கக்கூடிய வேலைத் திட்டங்களைக்கூட தமது அமைச்சின் உத்தியோகத்தர்கள் பொறுப்பெடுத்து செய்து வருவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந்நிலையில் தமது குடும்ப உறவினர்களைப் பிரிந்து முகாம்களில் வாழும் குடும்பங்களை இனங்கண்டு அவர்களை ஒன்று சேர்க்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ள அமைச்சர் அறுபது வயதிற்கு மேற்பட்ட முதியவர்களை நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்புக் காரணம் கருதி முகாம்களில் உள்ளவர்களை உறவினர்கள் சென்று சந்திப்பதற்கான அனுமதி மறுக்கப்பட்டு வருகின்ற நிலையில் உறவினர்கள் அவர்களை சந்திப்பதற்கான உரிய நடவடிக்கைகளையும் அவர் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**உங்கள்எண்ணங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்**

மீண்டும் வாழ்வோம் தொடர்பான உங்கள் மேலான எண்ணங்களையும் படைப்புக்களையும் எதிர்பார்க்கிறோம் நீங்கள் ஓவியம் வரையும் ஆற்றல் மிக்கவர் எனில் உங்கள் அனுபவங்களை சித்தரிக்கும் ஓவியங்களை வரைந்து எமக்கு அனுப்பி வையுங்கள் அவற்றை மீண்டும் வாழ்வோம் பகுதியில் பிரசுரிக்க காத்திருக்கிறோம்.

த.பெ.இல.1039 கொழும்பு

தொ.பே. -0774952242

மின்னஞ்சல்-info@lifeline srilanka.com

# தொடரும் வன்னிக்கான உணவு மற்றும் மருந்து விநியோகம்

வன்னிப் பிரதேசத்திலிருந்து தொடர்ச்சியாக மக்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர். இதுவரை 47ஆயிரத்து 241பேர் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்துள்ளனர். வன்னி புது மாத்தளன் பிரதேசத்திலிருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் 4ஆயிரத்து 116 நோயாளிகள் மற்றும் காயப்பட்டவர்கள் திருகோணமலைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். தற்பொழுது அழைத்து வரப்படுபவர்கள் புல்மோட்டையில் உள்ள இந்திய தற்காலிக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என வைத்திய கலாநிதி குணாளன் தெரிவித்துள்ளார்.



புதுமாத்தளன் தற்காலிக வைத்தியசாலை

வன்னிக்கான உணவு விநியோகமும் மருந்துப் பொருட்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் கடந்த வாரத்தில் மட்டும் அண்ணளவாக தொளாயிரம் தொன் எடையுடைய பொருட்கள் அனுப்பப்பட்டதாகவும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் வன்னிக்குத் தேவையான மேலதிக மருந்துப் பொருட்களை அனுப்புவதற்குரிய ஏற்பாடுகளை செய்து வருவதாகவும் சுகாதார அமைச்சானது அதற்குரிய மருந்துகளை ஏற்கனவே திருகோணமலைக்கு அனுப்பி வைத்துள்ளது எனவும் நாள்தோறும் செல்லும் கப்பலில் மருந்துப் பொருட்களையும் அனுப்புவதற்கு ஏற்பாடுகள்ளை மேற்கொண்டு வருவதாகவும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

வன்னிக்கான உணவு விநியோகத்தை அரசாங்கமும் உலக உணவுத் திட்டமும் இணைந்து மேற்கொள்கிறது.

உலக உணவுத் திட்டமானது கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி வன்னியிலிருந்து வெளியேறிய போதும் இவ்வருடம் ஜனவரி மாதம் வரை தரைமார்க்கமாக 8 ஆயிரத்து 400 தொன் எடையுடைய பொருட்களை அனுப்பி வைத்துள்ளது.

வன்னிக்கு அனுப்பும் பொருட்களில் தனிநபர்கள் பெறும் அளவுகள் குறித்து உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி அடனான்கான் தெரிவிக்கையில்,

எங்களுடைய உலர் உணவுத் தொகுதி ஒரு நாளைக்கு ஒருவருக்கு அரைக்கிலோ அளவிலானதாக அமைகிறது. இது அண்ணளவாக ஆயிரத்து 900 கிலோ கலோரியினைக் கொண்டதாகவும் 400 கிராம் தானியங்களை உள்ளடங்கியதாகவும் உள்ளது.

அது பெரும்பாலும் கோதுமை மாவாகவோ, அரிசியாகவோ அல்லது இரண்டும் கலந்ததாகவோ அமையும்.

**உலக உணவுத் திட்டமானது கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி வன்னியிலிருந்து வெளியேறிய போதும் இவ்வருடம் ஜனவரி மாதம் வரை தரைமார்க்கமாக 8 ஆயிரத்து 400 தொன் எடையுடைய பொருட்களை அனுப்பிவைத்துள்ளது.**

அத்தோடு 6 கிராம் பீன்ஸ், 2 கிராம் சீனி மற்றும் 200 மில்லிலீட்டர் மரக்கறி எண்ணெய் ஆகியவற்றை அந்த உணவுப் பொதியில் வைத்திருக்கின்றோம்.

அனைத்துமே ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு அரை கிலோ கிராம் என்ற அளவில் தான் விநியோகிக்கின்றோம் என்றார். கடந்த வாரத்தில் மாத்திரம் அண்ணளவாக 900 தொன் எடையுடைய பொருட்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை இவ்வாரம் அனுப்பிய 500 தொன் எடையுடைய பொருட்கள் முற்றாகத் தரையிறக்கம் செய்யப்பட்டு மேலதிக அரசாங்க அதிபரின் தலைமையில் மக்களுக்கு உடனுக்குடன் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மீண்டும் வாழ்வோம்**

"மீண்டும் வாழ் வோம்" திட்டமானது இலங்கையின் அசாதாரண சூழ்நிலைகளினால் இடம் பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்காகவும் மீள் குடியேறி உள்ளவர்களுக்காகவும் தகவல்களை வழங்கும் பரந்துபட்ட மனிதாபிமான செயற்றிட்ட அமைப்புக்களின் ஓர் அங்கமாகும்.

மூடனுடன் விவாதம் செய்வது அறிவுடமையன்று பக்கத்தில் நிற்பவர்களுக்கு யார் மூடனென்று புரியாமல் போய்விடும்.

~ லிஃபிட்டிங்

வலம்புரி

# இலங்கை அரசு நினைப்பது போல் 'இனப்பிரச்சினை' சுலபமானதல்ல

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக பேச்சுவார்த்தை நடத்த வருமாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்திருந்தார்.

இவ் அழைப்பை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் நிராகரித்து விட்டனர்.

வன்னியில் தமிழ் மக்கள் பலியாகிக் கொண்டிருக்கும்போது இனப்பிரச்சினை குறித்து எங்ஙனம் பேசமுடியும்? முதலில் யுத்த நிறுத்தம் செய்து தமிழ் மக்களைப் பாதுகாத்தால், ஜனாதிபதியின் அழைப்புக் குறித்து சாதகமாக ஆராய முடியும் என்பது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அறிவிப்பு.

இந்த அறிவிப்பு எவராலும் நிராகரிக்கப்பட முடியாதது. சமாதானப் பேச்சுவார்த்தை என்பது ஓர் சுமுகமான சூழ்நிலையிலேயே சாத்தியமாகும்.

ஒரு புறம் யுத்தம் மறுபுறம் சமாதானம் என்பதெல்லாம் மேடையில் நின்று பேசுவதற்குச் சாத்தியமானதே, தவிர நடைமுறைக்கு ஒவ்வாத விடயமாகும்.

நடைமுறைக்கு ஒவ்வாத விடயம் குறித்துப் பேசிக் காலம் கழித்த முப்பது வருடகால வரலாறு இலங்கை அரசுக்கு உண்டு.

இந்தத் தவறு தொடர்வதாகவே தெரிகிறது. இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காண்பதற்கு வருமாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை அழைத்த அரசுக்கு, தமது அழைப்பை கூட்டமைப்பினர் அடியோடு நிராகரிப்பர் என்பது நன்கு தெரியும்.

இருந்தும் சர்வதேச சமூகத்தின் முன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்த நாம் தயாராக இருக்கிறோம். ஆனால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புத்தான் மறுக்கிறது.

இது விடயத்தில் சர்வதேசம் தலையிட்டு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் பேச்சுவார்த்தையில் பங்குபற்ற உதவ வேண்டுமெனக் கூறி, பந்தை சர்வ்தேசத்திடம் எறிந்து விடுவதே அரசின் உள்நோக்கமாகும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமென்ற தூய சிந்தனை அரசிடம் இருந்திருக்குமாயின், அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையில் கூடிய சர்வகட்சிக்குழுவில் பங்குபற்றுமாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு அழைப்பு விடுத்திருக்க வேண்டுமல்லவா?

அப்போதெல்லாம் நாங்கள் தருவதை நீங்கள் பெற்றுக் கொள்ளவேண்டும் என்ற நிலையில் இருந்த அரசுக்கு தற்போது தமிழ்த்தரப்பு பிரதிநிதிகளுடன் பேசவேண்டிய தேவையுள்ளது. இதனால் அழைப்பு விடுக்கப்படுகிறது.

எது எப்படியாயினும் அரசு நினைப்பதுபோல் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதாகக் காட்டி விடமுடியாது.

ஏனெனில் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது சர்வதேச சமூகத்தை ஆற்றுப்படுத்தும் விடயமன்று. அது இலங்கைத் தமிழரின் உரிமையோடு சம்மந்தப்பட்டது.

தமிழரை அழித்து தமிழருக்கு உரிமை கொடுப்பது என்பது உதவத்த முடிபாகும்.

# கூட்டமைப்புக்காக போரை நிறுத்த வேண்டிய அவசியம் அரசுக்கில்லை

## ஜே.வி.பி. கருத்து

(கொழும்பு)

தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் தேவைக்காக இராணுவ நடவடிக்கைகளை இடைநிறுத்தி புலிகளுடன் போர் நிறுத்தத்திற்கு செல்ல வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கில்லை.

ஜனாதிபதியின் அழைப்பினை புறக்கணித்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நலனை கருத்தில் கொள்ளாது தமிழ் மக்களின் நலன் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்று ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலாளர் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

வன்னியில் மனிதாபிமான பணிகள் தொடர்ந்து வருகையில் அதற்கு எதிர்மறை கருத்துக்களை தமிழ் தேசியக் கூட்டமைப்பு வெளியிடுகின்றமை பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தும் நடவடிக்கையாகும் என்றும் அவர் கூறினார்.


இராணுவ நடவடிக்கையை இடை நிறுத்த வலியுறுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கடந்த வியாழக்கிழமை வெளி யிட்ட அறிவிப்பு தொடர்பாக விளக்கமளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது,

நாட்டின் தற்போதைய தேவை போர் நிறுத்தம் அல்ல, புலி பயங்கரவாதிகளின் பிரச்சினைக்கு இராணுவ வீரர்கள் முற்றுப் புள்ளி வைத்து விட்டனர். இனி மிகுதியாக இருப்பது வடக்கை அபிவிருத்தி செய்து ஒரு நாட்டிற்குள் சகல இன மக்களையும் ஒற்றுமையாகவும் சமாதானமாகவும் வாழும் சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதாகும்.

தற்போது அரசாங்கத்தின் தேவையும் அதுவாகவே இருக்க வேண்டும். இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காண இலங்கை அரசாங்கம் சுயமாக செயல்பட வேண்டும். சர்வதேசத்தின் தேவையற்ற அழுத்தங்களுக்கு அரசு ஒரு போதும் செவி சாய்க்கக் கூடாது என்றார். (ஓ-5)

# என்னுடன் விவாதத்தில் பங்கேற்க தயாரா? மன்மோகன் சிங்கிற்கு அத்வானி சவால்





(செப்பா)

என்னுடன் தொலைக்காட்சி விவாதத்தில் பங்கேற்க பிரதமர் மன்மோகன் சிங் தயாரா? என பா.ஜ மூத்த தலைவர் அத்தவானி சவால் விடுத்துள்ளார்.

சமீப நாட்களாக பிரதமர் மன்மோகன் சிங்கை கடுமையாக விமர் சித்து வரும் அத்வானி, அருணாச்சல பிரதேசம் செப்பாவில் பேசு கையில்,

அமெரிக்காவில் எதிரெதிர் அணியில் உள்ள அரசியல் தலைவர்கள் தொலைக் காட்சி விவாதத்தில் பங்கேற்பர்.

அது போல் பிரதமர் மன்மோகன் சிங் என்னுடன் விவா தத்தில் பங்கேற்கத் தயாரா? பல்வேறு பிரச்சினைகள் தொடர் பாக பிரதமர் மன்மோகன் சிங்குடன் விவாதிக்க நான் தயார் என்றார். இத பற்றி காங்கிரஸ் தொடர்பாளர் கூறுகையில், விவாதத்தில் பங்கேற்பது தொடர் பான சவாலுக்கு பதில் அளிக்க வேண்டியது பிரதமரே என தெரிவித்துள்ளார். (ஓ-5)

# போதைப்பொருள் கடத்திய பெண்ணுக்கு மரண தண்டனை

(கொழும்பு)


இந்தியாவிலிருந்து ஹெரோயின் போதைப் பொருளைக் கடத்திய சம்பவத்தில் குற்றவாளியாகக் காணப்பட்ட பெண் ஒருவருக்கு நீர்கொழும்பு மேல் நீதிமன்றம் மரணதண்டனை விதித்துள்ளது.

கிராண்பாஸ் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவருக்குகே இந்த மரண தண்டணை விதிக்கப்பட்டுள்ளது.

2001 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21 ஆம் திகதி 15.1 கிராம் போதைப் பொருளை நாட்டிற்கு கடத்தியதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இந்த குற்றச்சாட்டின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அவர் பிணை வழங்கப்பட்ட பின்னர் வழக்கு விசாரணைக்கு சமூகமளிக்காது நீதிமன்றத்திலிருந்து தலை மறைவாகியிருந்தார்.

இதனை அடுத்து குற்றவாளியான பெண்ணுக்கு மரண தண்டனை விதித்த நீர் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துமாறு பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பணியகத்துக்கு உத்தரவிட்டுள்ளார். (ஓ)

# மடிவது -வாழ்வா? சாவா?



இறப்பு எனப்படுவது ஒருவனுக்கு உறக்கம் வருதலைப் போன்றது. பிறப்பு எனப்படுவது உறக்கம் நீங்கி விழித்துக் கொள்வதைப் போன்றது. அதுபோல, மடிவது என்பது வாழ்வா? அல்லது சாவா? என்றால் பலருக்குச் சாவாக இருக்கலாம், ஆனால் சிலருக்கு அது வாழ்வாக உள்ளது. ஒருவன் சருகாக மடிந்தால் அது அவனுக்கு சாவு. காரணம், சருகிலே உயிர் இல்லை. இனி அது மண்ணோடு மண்ணாக மட்கிப் போகத்தான் வேண்டும்.

ஆனால் விதையாக, கோதுமை மணியாக ஒருவன் மடிந்தால் அங்கே புது வாழ்வு பிறக்கிறது. காரணம், அங்கு

## பரமபிதா காட்டிய பாதை

கோதுமை மணியிலே உயிர் உண்டு. எனவே சருகாக இல்லாமல் மணியாக, விதையாக மடிந்தால் பலன் உண்டு. இதைத்தான் இன்றைய நற்செய்தி ஆழமாக எடுத்துச் சொல்லுகிறது. திருவிழாவுக்காக எருசலேம் வந்திருந்த கிரேக்கர் சிலர், இயேசுவைக் காண வேண்டும் என்று அவரின் திருத்தூதரிடம் கேட்டார்கள். அதை அவர்கள் இயேசுவிடம் சொன்னார்கள். உடனே அவர் தனக்கு வரப்போகும் துன்ப நேரத்தைப் பற்றிக்கூறி கோதுமை மணிக்கு தன்னை ஒப்பிட்டு உலகம் மீட்பு பெற தான் சருகாக அல்ல கோதுமை மணியாக மடிய வேண்டும். சாகவேண்டும் என்று கூறுகிறார்.

இங்கு மடிவது என்பதை இரண்டு வகையில் பொருளாகக் கொள்ளலாம். நமது வாழ் வுக்கென்று பார்க்கும்போது எவன் ஒருவன் தன் சுய நலத் திற்கு, பொறாமைக்கு, காம இச்சைக்கு, ஆணவத்திற்கு அழிந்தும், இன்னும் தன் னுள் நிரம்பியுள்ள தீய எண்ணங்கள், செயல்களை மண்ணோடு மண்ணாகப் போட்டு புதைத்தும் அதை அழிக்கின்றானோ அன்று தான் அவன் வாழ்வில் வசந் தம் பிறக்கின்றது. ஆனந்தம் வருகின்றது. பிறர் நலம் சுரக்கின்றது. எதார்த்தம் மலர்கின்றது. இதுவே அவன் வாழ்விலும் பிறர் வாழ்விலும் ஏற்படுகின்ற விளைச் சலின் பலன் .இரண்டாவது, எவன் ஒருவன் தன் குடும்பத்திற்காக , சமுதாயத்திற்காக நீதிக்காக , உண்மைக்காக , அமைதிக்காக தன்னையே இழக்கின்றானே தன் அடையாளத்தையே துறக்கின்றா னோ அன்று தான் அந்த குடும்பத்திற்கும் அந்த சமுதாயத்திற்கும் விடியல் பிறக்கின்றது, வசந்தம் மலர்கின்றது, நீதி பிறக்கின்றது, உண்மை வளர்கின்றது.

இதைத்தான் இயேசு நற்செய்தியில் 'தமக்கென்றே வாழ்வோர் தம் வாழ்வை இழந்துவிடுவர், இவ்வுலகில் தம் வாழ்வை ஒரு பொருட்டாக கருதாதோர் நிலை வாழ்வுக்குத் தம்மை உருவாக்குவர்''

தியாகங்கள் புரிக்கின்ற போது தான் வாழ்வு இனிக்கின்றது, வசந்தம் பிறக்கிறது. ஒன்றை இழக்கின்ற போது தான் பல நல்லவற்றைப் பெறுகின்றோம் இந்தத் தவக்காலத்தில் நாம் என்ன தியாகம் செய்யப்போகின்றோம்? நாம் எதை இழக்கப்போகின்றோம்? யாருக்காக இழக்கப்போகின்றோம்? சிந்திப்போம்...செயற்படுவோம்...

*ஜோன் றொபேர்ட்.*


# சூடான் அதிபர் போர் குற்றவாளி!



தற்போது பத்திரிகைகளில் ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சூடானின் ஆட்சித் தலைவர் ஓமர் அல் பஷீர் (Omar Hassan Al Baschir) பெயர் பலமாக அடிபடுகிறது. அவருக்கு எதிராக மேற்கொண்ட இனப்படு கொலை (3) மானிடத்துக்கு எதிரான குற்றங்கள் (5) மற்றும் போர் குற்றங்கள்(2) சுமத்தப்பட்டுள்ளன.

2008இல் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முக்கிய வழக்குத்தொடருனர் பஷீர்டாவூர் நகரில் இயங்கும் மூன்று சிறுபான்மை இனக்குழுக்கள் செய்த கிளர்ச்சியை அடக்க எடுத்த நடவடிக்கையின் போது போர்க்குற்றங்கள் இடம்பெற்றதாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும் 2003 ஆம் ஆண்டு பஷீர் சூடான் இராணுவத்துக்கு கிளர்ச்சியை அடக்குமாறும் யாரையும் போர்க் கைதிகளாகப் பிடித்துக்கொண்டு வரவேண்டாம் எனவும் கட்டளை பிறப்பித்தார் எனவும் குற்றம் சாட்டியுள்ளார்.



# மற்றைய அதிபர்கள்?

ஹேக்கில் இயங்கும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மார்ச் மாதம் 4ஆம் திகதி பஷீரைக் கைது செய்யுமாறு பிடியாணை பிறப்பித்துள்ளது.

ஆனால் அந்தப் பிடியாணையை சூடான் ஏற்பதற்கான சாத்தியம் இல்லை. பஷீர் தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ளார். தன் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்கிறார் மேலும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பிடியாணை பிறப்பிக்கும் உரிமை கிடையாது என்றும் சொல்கிறார். இந்தப் பிடியாணைக்கு எதிராக சூடானில் பேரணிகள் நடத்தப்படுகின்றன. சர்வதேச குற்றவியல் நீதிமன்றப் பிடியாணையை தாங்கள் மதிக்கப் போவதில்லை என்றும் டாவூர் எதிரிகளின் சுடுகாடாக மாறும் எனவும் எச்சரித்துள்ளனர்.


சூடான் அகதிமுகாம்களில் மருத்துவதேவைக்காக வேண்டி காத்திருக்கும் மக்கள்.

1944இல் பிறந்த அல் பஷீர் சூடான் நாட்டு இராணுவத்தில் சேர்ந்து படிப்படியாக பதவி உயர்வு பெற்று மேலே உயர்ந்தார். 1989இல் அப்போதைய பிரதமர் சாதிக் அல் மாடியை ஒரு இராணுவப் புரட்சி மூலம் கவிழ்த்துவிட்டு ஆட்சியைக் கைப்பற்றினார். 1993ஒக்டோபர் 16இல் பஷீர் தேசிய மீட்சிக்கான புரட்சிகர கட்டளை அவையைக் கலைத்து விட்டு தன்னைத்தானே ஆட்சித் தலைவராக நியமித்துக்கொண்டார். அரசியல் கட்சிகளும் கலைக்கப்பட்டன. 1996இல் நடந்த ஆட்சித் தலைவர் தேர்தலில் போட்டியிட்ட ஒரே வேட்பாளரான பஷீர் வெற்றி பெற்றார். இன்று சூடான் நாட்டு தேசிய காங்கிரசின் தலைவராகவும் விளங்குகின்றார்.

ஒக்டோபர் 2004இல் தென்சூடான் பகுதிக்கு மட்டுப்படுத்தப்பட்ட தன்னாட்சி உரிமையை வழங்கி 19 ஆண்டுகாலமாக நடந்து வந்த உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டு வந்தார். ஆனால் அவரது அரசு டாவூரில் நடத்திய மனிதப்படுகொலை கண்டனத்துக்கு உள்ளாகி வருகிறது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் உரோமில் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையால் கூட்டப்பட்ட இராஜதந்திரிகளின் மாநாட்டில் 1998 யூலை 17 இல் உருவாக்கப்பட்டது. இந்த மாநாடு 5 வாரம் நீடித்தது. மொத்தம் 120 நாடுகள் ஆதரவு தெரிவித்தன. ஏழு நாடுகள் எதிர்த்தன. 21 நாடுகள் நடுநிலைமை வகித்தன. நீதிமன்றம் யூலை 01,2002 இல் நடைமுறைக்கு வந்தது. இந்த ஆண்டு ஜனவரி மாதம் வரை 108 நாடுகள் நீதிமன்றத்தை அங்கீகரித்துள்ளன. அங்கீகரிக்காத நாடுகளில் அமெரிக்கா ,இந்தியா,ரஷ்யா, சூடான் முக்கியமானவை.

அனைத்துலக மட்டத்தில் இனப்படுகொலை மற்றும் கடுமையான குற்றங்களை இழைப்பவர்களை நீதிமன்றத்தில் நிறுத்தித் தண்டனை வாங்கிக் கொடுப்பதே இந்த நீதிமன்றம் உருவாக்கப்பட்டதற்குக் காரணமாகும். 2003-2005 காலப்பகுதியில் மூன்று இனக் குழுக்கள் வாழும் ஊர்கள் தாக்கப்பட்டு அழிக்கப்பட்டன. இனப்படு கொலைக்கு பாலியல் வன்முறை, பட்டினி மற்றும் பயம் போன்ற ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன. குறிப்பாக இளம் பெண்கள் 70 அகவை கடந்த மூதாட்டிகள் கும்பலான பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டனர்.

சூடானின் பதிலடியை எதிர்பார்த்து ஐ.நா. அமைப்பின் அதிகாரிகள் மற்றும் சர்வதேச அமைதிப் படையினர் அதியுச்ச எச்சரிக்கை நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். ஐ.நா.வின் பொதுச் செயலர் பான் கீ மூன் *யாரும் சட்டத்தை விட மேலானவர்கள் அல்ல. நீதியும் அமைதியும் ஒன்றை ஒன்று அணைத்துப் போட வேண்டும்* என்று கேட்டிருக்கிறார்.

சர்வதேச நீதிமன்றத்தின் நடவடிக்கைக்கு வேறு காரணிகள் இருப்பதாக ஆபிரிக்கத் தலைவர்கள் எண்ணுகிறார்கள். சூடானின் எண்ணெய் வளந்தான் மேற்குலக நாடுகளது குறி அல்லது இலக்கு என்கிறார்கள்.

1800களிலும் 1900 களிலும் சூடானில் எண்ணெய் கண்டு பிடிக்கப்பட்டது. அதனை அடுத்து அந்த எண்ணெய் வளத்தைக் கையகப்படுத்த அமெரிக்கா , ஐரோப்பா மற்றும் சீனா தங்களுக்குள் போட்டி போடுகின்றன. மேற்கு நாடுகளை நம்பாத பஷீர் தனது நாட்டின் எண்ணெய் வளத்தையும் அது தொடர்பான உடன்பாடுகளையும் சீனாவுக்குக் கொடுத்து விட்டார். ஒரு முதலாளித்துவ நாட்டுக் குள்ள

**உலக கண்ணோட்டம்**

பெரும் உற்சாகத்தோடு அந்த எண்ணெய் வளத்தை சீனா சுரண்டிக் கொண்டிருக்கிறது. சூடானின் எண்ணெய் வளத்தை மேற்குலக நாடுகள் கோட்டை விட்டாலும் அந்த நாட்டின் ஆட்சியை மாற்றும் முயற்சியை மட்டும் கைவிடவில்லை.

1900களில் ஈராக்குக்கு எதிராக இடம்பெற்ற முதல் வளைகுடாப் போரை அடுத்து சதாம் ஹுசைன் அமெரிக்காவுக்கு எதிரான போக்கைக் கடைப்பிடித்தார்.

விற்கும் எண்ணெய்க்கு டொலருக்குப் பதில் யூரோ நாணயத்தை வாங்குவது என்ற சதாம் ஹுசைனின் முடிபு அமெரிக்காவிற்கு எரிச்சலை கொடுத்தது. அந்த முடிபு தனக்கு எதிரான முடிபு என அமெரிக்கா எண்ணியது. எனவே ஈராக் மீது படையெடுப்பது என்ற முடிபு எடுக்கப்பட்டது. இன்று ஈராக்கின் எண்ணெய் வளம் அமெரிக்காவின் கைகளில் இருக்கிறது.

ஈராக் மீதான அமெரிக்காவின் படையெடுப்பு ஏனைய எண்ணெய் வள நாடுகளுக்கு ஒரு அபாய அறிவிப்பாகவும் எச்சரிக்கை யாகவும் அமைந்தது. லிபியா அந்த எச்சரிக்கையை விளையாட்டாக நினைக்கவில்லை. எனவே அது அமெரிக்காவோடு சமரசம் செய்து கொண்டு விட்டது.

சூடான், பஷீருக்கு எதிரான பிடியாணை சீனாவை ஒதுக்கிவிட்டு மேற்குலக நாடுகளது எண்ணெய் குழுமங்களைக் கொண்டுவரும் முயற்சி என நினைக்கிறது. ஆனால் சூடான் அதற்கு மசிவதாக இல்லை. சூடான் தான் சீனாவின் மிகப் பெரிய எண்ணெய் ஏற்றுமதி நாடு. சீனாதான் சூடானின் ஆயுத தளபாட ஏற்றுமதி நாடு. ஒரு வேளாண்மை நாடாக இருந்த சீனா இன்று துரித கதியில் கைத்தொழில் நாடாக மாறிவருகிறது. அதன் எண்ணெய்த் தேவை பன்மடங்காக அதிகரித் துள்ளது. அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தி உலகின் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது.



சூடானுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு அவை எந்தவித நடவடிக்கையும் எடுக்காத வண்ணம் சீனா பார்த்துக் கொள்கிறது. அமெரிக்கா இஸ்ரேலின் நலங்களை எப்படி ஐ.நாவில் பார்த்துக் கொள்கிறதோ அதைத் தான் சீனாவும் செய்கிறது. இதில் யார் யோக்கியன் யார் அயோக்கியன் என்பதைக் கண்டு பிடிப்பது கடினமாகும்.

டாவூரில் இடம்பெற்ற கலவரத்துக்கு சூடான் அரசின் பாகுபாடே காரணமாகும். டாவூரில் வாழும் மக்களில் பெரும்பான்மை முஸ்லிம் கள் ஆவர். ஆனால் அவர்கள் ஆபிரிக்க இனத்தவர். உலக நாடுகள் டாவூர் மோதல்களை பெரும்பான்மை அராபியர்களுக்கும் சிறுபான்மை அராபியர் அல்லாதோருக்கும் இடையிலான மோதலாகவே பார்க்கின்றன. டாவூர் மக்கள் தங்கள் நிலம், அரசு ஆதரவு அராபிய நாடோடிகளால் அபகரிக்கப்படுவதையிட்டு முறையிட்டு வந்துள்ளார் கள். பல்லாயிரக்கணக்கான டாவூர் மக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். ஆயிரக் கணக்கான பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். நூற்றுக் கணக்கான ஊர்கள் சூறையாடப்பட்டுள்ளன. இந்த வன்முறையைத் தடுப்பதற்கு ஆட்சித் தலைவர் பஷீர் சரி, அவரது அரசு சரி எந்த முயற்சியுமே செய்யவில்லை. டாவூர் மக்களது அவலங்கள் அவர்கள் கிளர்ச்சி செய்ததற்கான தண்டனை அல்லது படிப்பித்த பாடம் என பஷீர் அரசு நினைக்கிறது.

பாதுகாப்பு அவை பஷீருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை சர்வதேச நீதிமன்றத்துக்கு அறிவித்தது. அதன் அடிப்படையிலேயே அது பிடியாணை பிறப்பித்துள்ளது. பிடியாணை பிறப்பித்ததை அடுத்து சூடான் 50 விழுக்காடு சர்வதேச ஊழியர்களை நாட்டை விட்டு வெளியேற்றி விட்டது. இவர்கள் தான் டாவூர் மக்களுக்கு உதவி செய்து கொண்டிருந்தார்கள். இது டாவூரில் வாழும் மக்களை நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. பலர் இஸ்ரேலில் தஞ்சம் புகுந்துள்ளார்கள்.

பஷீர் மீது போர்க்குற்றம் சாட்டி நடவடிக்கை எடுப்பது நல்லதுதான். ஆனால் உலகில் அவர் மட்டுந்தான் மானிடத்துக்கு எதிரான குற்றங்களை இழைத்தார்? ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் மீது படையெடுத்து பேரழிவை ஏற்படுத்தி போர்க் குற்றம் இழைத்த முன்னாள் அமெரிக்க ஆட்சித் தலைவர் ஜோர்ஜ் புஷ், ரோனி பிளேயர் போன்றோர்களை சர்வதேச நீதிமன்றம் நீதியின் முன் நிறுத்துமா? ஈராக்கில் மட்டும் பத்து இலட்சம் மக்கள் அமெரிக்க படையினரால் கொல்லப்பட்டார்கள். நாற்பது இலட்சம் மக்கள் ஈராக்கை விட்டு ஓடி அண்டை நாடுகளில் தஞ்சம் புகுந்தார்கள்.

# நியூசிலாந்து பந்து வீச்சாளர் மிரட்டல்

# நிலைகுலைந்த இந்திய அணி பொலோனானது

(நேபியர்)

நியூசிலாந்து பந்து வீச்சாளர்களிடம் சிக்கிய இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 305 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்து பொலோன்நிலைக்கு தள்ளப்பட்டது.

இதன்மூலம் இரண்டாம் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் இந்திய அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் ஒரு விக்கெட்டையிழந்து 47 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நியூசிலாந்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 2 இருபது-20, 5 ஒரு நாள் மற்றும் 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் இருபது-20 தொடரை நியூசிலாந்து 2:0 என்ற கணக்கிலும் ஒரு நாள் தொடரை இந்திய அணி 3:1 என்ற கணக்கிலும் கைப்பற்றின.

இந்நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட்தொடரின் முதலாவது போட்டியில் இந்திய அணி வெற்றிபெற்று முன்னணியிலுள்ள நிலையில் இரண்டாவது போட்டி கடந்த 26ஆம் திகதி நேபியரில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் 9 விக்கெட்டுக்களையிழந்து 619 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை இடை நிறுத்தியது.

இதில் ரைடர் 201 ஓட்டங்களையும், ரெய்லர் 151, மக்குலம் 115 ஓட்டங்களையும், அணித்தலைவர் விக்டோரி 55, பிரங்க்ளின் 52 ஓட்டங்களை யும் எடுத்தனர்.

பந்து வீச்சில் சகீர்கான், இஷாந்த் சர்மா ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும், ஹர்பஜன்சிங் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் 3 விக்கெட்டுக்களையிழந்து 79 ஓட் டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் மூன்றாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி அதன் முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 305 ஓட்டங்களை மாத்திரமெடுத்து பொலோன் நிலைக்குத் தள்ளப்பட்து.

இதில் ராகுல் டிராவிட் 83 ஓட்டங்களையும், வி.வி.எஸ். லக்ஸ்மன் 76 ஓட்டங்களையும், சச்சின் டெண்டுல்கர் 49 ஓட்டங்களையும் எடுத்தனர். யுவராஜ்சிங் ஓட்டமெதனையும் எடுக்காமல் ஆட்டமிழந்தார்.

பந்துவீச்சில் மார்டீன் 3 விக்கெட்டுக்களையும் அணித் தலைவர் டானியல் விக்டோரி, ஓ பிறின், பட்டேல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் ரைடர் ஒரு விக்கெட்டையும் சாய்த் தனர்.



பொலோன் நிலைக்கு தள்ளப்பட்ட இந்திய அணி தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் ஒரு விக்கெட்டையிழந்து 47 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் அணித் தலை வர் சேவாக் 22 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்ததுடன் காம்பீர் 14, டிராவிட் 11 ஓட்டங்களை ஆட்டமிழக் காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் பட்டேல் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

இதன்மூலம் இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க இந்திய அணி இரண்டா வது இன்னிங்ஸில் மேலும் 247 ஓட்டங்கள் எடுக்க வேண்டிய நிலை யில் நான்காம் நாள் ஆட்டம் இன் றாகும்.

# பிரவோவிடம் பணிந்தது இங்கிலாந்து

# மேற்கிந்தியத் தீவுகள் வெற்றி

(பார்படோஸ்)

பிரவோவின் துல்லியமான பந்துவீச்சும் ஹயிலின் அதிரடியான துடுப்பாட்டமும் கைகோர்த்து மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலாவது ஒருநாள் போட்டியில் 8 விக்கெட்டுக்களால் இங்கிலாந்து அணியை வீழ்த்தியது.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி 5டெஸ்ட், ஒரே ஒரு இருபது-20 மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் டெஸ்ட் தொடரை மேற்கிந்தியத்தீவுகள் அணி 1:0 என்ற கணக்கில் கைப்பற்றியதுடன் ஒரே ஒரு இருபது-20 போட்டியிலும் வெற்றி பெற்றதும் இந்நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதலாவது போட்டி நேற்று முன்தினம் பார்படோஸில் நடைபெற்றது.

இப்போட்டி ஆரம்பமாவதற்கு முன்பாக பெய்த மழை காரணமாக ஆட்டம் சிறிதுநேரம் தாமதமாக ஆரம்பமானது. இதனால் போட்டி இரு அணிகளுக்கும் தலா 44 ஓவர்களாக நிர்ணயிக்கப்பட்டது.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி பிராவோ-எட்வோட்ஸ் ஜோடியின் பந்துவீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் 41:3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களைமிழந்து 117 ஓட்டங்களை எடுத்தது.

இதில் மாஸ்கரன்ஹஸ் 36 ஓட்டங்களையும் ஷா, பற்றி ஆகியோர் தலா 17 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பிரவோ 4 விக்கெட்டுக்களையும் எட்வோட்ஸ் 3 விக்கெட்டுக்களையும் பொல்லர்ட் 2விக்கெட்டுக்களையும் பாக்கர் ஒரு விக்கெட்டையும் பதம் பார்த்தனர்.

தொடர்ந்து மேற்கிந்தியத்தீவுகள்அணிக்கு டக்-வேத் லூயிஸ் முறையில் வெற்றி இலக்காக 44 ஓவர்களில் 117 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது.

இதனடிப்படையில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி ஹயிலின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் 14.4 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 117 ஓட்டங்களை எடுத்து 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் அணித்தலைவர் ஹயில் 43 பந்துகளில் (5 பவுண்டரிகள், 8 சிக்ஸர்கள் அடங்கலாக) 80 ஓட்டங்களையும் சிம்மோன்ஸ் ஆட்டமிழக்காமல் 14, சர்வான் 10 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் பிரோட், அன்டர்சன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் மேற்கிந்தியத் தீவுகள் அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இப்போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் வெற்றிக்குவழி சமைத்த பிரவோ ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

## தென்னாபிரிக்க அணி வெற்றி

(ஜோகனஸ்பேர்க்)

பௌச்சர்-மோர்கல் ஜோடியின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் தென்னாபிரிக்க அணி முதலாவது இருபது-20 போட்டியில் 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தியது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 3 டெஸ்ட், 2 இருபது-20 மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்டதொடரில்விளையாடுகின்றது.

இதில் டெஸ்ட தொடரை அவுஸ்திரேலிய அணி 2:1 என்ற கணக்கில் வெற்றி பெற்ற நிலையில் முதலாவது இருபது-20 போட்டி நேற்று முன்தினம் ஜோகனஸ்பேர்க்கில் நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத் தாடிய அவுஸ்திரேலிய அணி டேவிட்-ஹசியின் அதிரடியின் மூலம் 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களையிழந்து 166 ஓட்டங்களை எடுத்தது. இதில் டேவிட் ஹசி ஆட்டமிழக்காமல் 44 பந்துகளில் 5 பவுண்டரிகள் 6 சிக்ஸர் உட்பட 88 ஓட்டங்களையும் வோர்னர் 38 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்து வீச்சில் பீற்றர்சன் 3 விக் கெட் டுக்களையும் பார்னல் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தி னர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 167 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி பௌச்சர்-மோர்கலின் அதிரடியான இணைப்பாட்டத்தின் மூலம் 19.2 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களையிழந்து 168 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் மோர்கல் 37 ஓட்டங்களையும் பௌச்சர் ஆட்டமிழக்காமல் 36 ஓட்டங்களை அம்லா 26 ஓட்டங்களும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஜீவெஸ், டேவிட் ஹசி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் ஜோன்சன், கோப்ஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் சகல துறைவீரர் டேவிட் ஹசி ஆட்டநாயகனாகத் தெரிவானார். இவ்வெற்றியின்மூலம் தென்னாபிரிக்க அணி 1:0 என்ற கணக்கில் தொடரில் முன்னிலை பெற்றது.

# சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... 47

## பந்தை எறிகிறார் ஹெயார் சர்ச்சை

இப்போட்டி டிசம்பர் 26ம் திகதி நடைபெற்ற மையால் பொக்சிங்டே(Boxing Day) டெஸ்ட் என அழைக்கப்பட்டது. அதாவது டிசம்பர் 25ம் திகதி கிறிஸ்மஸ் கொண்டாடப்படுவதால் மறுநாள் 26ம் திகதி நடைபெறும் போட்டிகளை இவ்வாறு அழைப்பது வழமை. 23 ஆண்டு 08மாதங்கள் வயதுடைய முரளிதரனுக்கு இது 22ஆவது டெஸ்ட் போட்டியாகும். அத்துடன் இதுவரை விளையாடிய 22 டெஸ்ட் போட்டிகளில் முரளிதரன் 80 விக்கெட்டுக்களை பதம் பார்த்துள்ளார். சராசரி 32.76ஆகும். இச்சுராசரியானது இலங்கை அணியின் இதுவரை விளையாடிய(1995க்கு முன்னர்) சிறந்த பெறுபேறாகும்.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது .முதல் ஆட்டத்தை கண்டு களிக்க 55 ஆயிரத்து 239 உள்ளூர், வெளிநாட்டு இரசிகர்கள் மெல்போன் கிரிக்கெட் அரங்கில் அமர்ந்திருந்தனர். அவுஸ்ரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

போட்டியின் மதிய போசன இடைவேளைக்கு முன்பாக முரளிதரன் இரண்டு ஓவர்கள் பந்து வீசினார். அப்போது நடுவராக ஸ்டீவ்டுனீஸும் மைதானத்தின் இரண்டாவது நடுவராக (Leg Umpire)ஹெயாரும் கடமையாற்றினர்.

எனினும் மதிய போசன இடைவேளைக்கு பின் இரண்டாம் பகுதி ஆட்டத்தில் பிற்பகல் 2.34 மணிக்கு முரளிதரனை பந்து வீச அணித்தலைவர் அர்ச்ஜுன ரணதுங்கா அழைத்தார் .


இதன் மூலம் போட்டியில் தனது மூன்றாவது ஓவரை மைதானத்தின் தெற்கு முனையிலிருந்து வீசிய முரளிதரன் அதனை மேடின் ஓவராக (Maiden Over) முடித்தார்.

அத்துடன் தெற்கு முனையில் டரல் ஹெயார் நடுவராக விருந்தார். அடுத்து நான்காவது ஓவரை முரளிதரன் வீசிய போது இரண்டாவது பந்து வீச்சை நடுவர் ஹெயார் முறைதவறிய பந்து (No-Balled) என அறிவித்தார்.

பாலா

தொடர்ந்து அந்த ஓவரில் நான்காவது ஆறாவது பந்து வீச்சுக்களை முரளிதரன் 'பந்தை எறிகிறார்' (Throwing) என நடுவர் ஹெயார் அறிவித்தார். அடுத்து ஐந்தாவது ஓவரை முரளிதரன் வீசிய போதும் நடுவர் ஹெயார் மூன்று முறை (இரண்டாவது நான்காவது மற்றும் ஆறாவது பந்து வீச்சுக்கள்)பந்தை எறிகிறார் என அறிவித்தார்.

(பயணிக்கும்)



நாவாந்துறைப் படிப்பகம்



# கடற்படையினரின் சோதனைக்குப் பின்னரே காயமடைந்தவர்களுக்கு சிகிச்சையளிக்கப்படுகிறது

## இந்திய மருத்துவக் குழுவின் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

உள்நாட்டு யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்துள்ளவர்களுக்கு இலங்கை சுகாதார அமைச்சு வழங்கும் வைத்திய சேவையை வலுப்படுத்தவே தாம் இங்கு சேவை யாற்றுவதாக இந்திய மருத்துவக் குழுவின் தலைவரான டாக்டர் வசந்தகுமார் தெரிவித்தார்.

இதற்காக விசேடமாக புல்மோட்டையில் செயல்படும் தள வைத்தியசாலையில் எக்ஸ்-ரே, இரத்த வங்கி உட்பட சகல வசதிகளுடன் தேவையான மருந்துகளும் இருப்பதாக அவர் தெரிவிக்கின்றார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கப்பல் வழியாக அழைத்து வரப்படுபவர்கள் முதலில் இலங்கை கடற்படையினரின் விசாரணை மற்றும் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றார்கள். அதன் பின்பு அவசர சிகிச்சைப் பிரிவுக்குக் கொண்டு வரப்பட்டு அதன் பின்னரே தேவையான சிகிச்சையளிக்கப்படுகின்றது.

காயமடைந்தவர்களைப் பொறுத்தவரை அநேகமானோர் ஷெல் வீச்சுக் காயங்களுக்கு உள்ளானவர்கள் மற்றும் பழைய காயங்களில் தொற்று ஏற்பட்டவர்கள். இவற்றைத் தவிர தலை, முதுகெலும்பு, நெஞ்சு மற்றும் உடலின் பல பகுதிகளிலும் காயமடைந்துள்ளவர்களும் வருகிறார்கள். இவர்களில் உடல் அங்கவீனமடைந்தவர்களும் உள்ளனர்.

எமது மருத்துவ குழுவில் 8 மருத்துவர் உட்பட 52 பேர் பணியாற்றுகின்றனர். மொழிப் பிரச்சினை இல்லை.தமிழ் மொழியை புரிந்து கொள்ளக் கூடியவர்களே இருக்கின்றார்கள். அதுமட்டுமல்ல மொழி பெயர்ப்பாளர்களின் உதவியும் இருப்பதால் மொழிப்பிரச்சினை இல்லை என்றார்.

(ந-5)

## வன்னியில் தொடரும் அகோர...

50 பேர் படுகாயமடைந்தனர். இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களான,

கமலநாதன் உதயராணி (வயது 35), கமலநாதன் கபில்ராஜ் (வயது 14), கமலநாதன் பிரியங்கா (வயது 10), கமலநாதன் பிரியதர்சினி (வயது 7), கமலநாதன் புகழவன் (வயது 7) மேற்குறிப்பிட்ட ஐந்து பேரும் மாத்தளன் கப்பல் வீதியில் நேற்று அதிகாலை 3 மணியளவில் எறிகணைத் தாக்குதலின் போது தூக்கத்திலேயே கொல்லப்பட்டுள்ளனர்.

5மாத கர்ப்பிணிப் பெண்ணான துஸ்யந்தன் அருள்மலர் (வயது 35), கமலச்சந்திரன் ரதன் (வயது 17), கமலச்சந்திரன் சரோஜினி தேவி (வயது 40),அன்ரன் (வயது 40), பரமு (வயது 45), நவரத்தினம் சுரேஸ் (வயது 26), ஆறுமுகம் உமாமகேஸ்வரன் (வயது 22), மயில்வாகனம் தங்கரத்தினம் (வயது 65), கனகரத்தினம் சுரேஸ்குமார் (வயது 30),

மாடாசாமி முருகேசு (வயது 68), பெரியசாமி தமிழ்ச்செல்வன் (வயது 13), குமாரவேலு நாகலிங்கம் (வயது 38), சுரேந்திரன் கார்த்திகா (வயது 2), அழகன் சண்முகம் (வயது 58), கனகரத்தினம் சுரேஸ்குமார் (வயது 33), கமலநாதன் கபில்ராஜ் (வயது 13), பிரியங்கா (வயது 10), பிரியதர்சினி (வயது 7), புகழவன் (வயது 6 மாதங்கள்), துஸ்யந்தன் (வயது 28), தர்மலிங்கம் குமுதினி (வயது 27), தர்மலிங்கம் தர்சன் (வயது 17),

கணேசலிங்கம் ராஜ்குமார் (வயது 23), கணேசலிங்கம் யமுனாராணி (வயது 48), தர்மலிங்கம் தருமராசா (வயது 38), தர்மலிங்கம் தயாளினி (வயது 26), கேசவன் மகேஸ்வரி (வயது 58),குமாரவேல் நாகலிங்கம் (வயது 48), விசுவலிங்கம் சசிகலா (வயது 38), துஸ்யந்தன் அருள்மலர் (வயது 28), தர்மலிங்கம் தருமராசா (வயது 32), கமலநாதன் கதிராய் (வயது 58), செல்வலிங்கம் கிருசிகா (வயது 9), சுப்பிரமணியம் திருநாவுக்கரசு (வயது 8), வேலாயுதம் மகேஸ்வரி (வயது 4), செல்வரட்ணம் தியானேஸ்வரன் (வயது 43), வேலாயுதம் தாரணி (வயது 21), ம.கார்மேகன் (வயது 42), மாரி பன்னீர்செல்வம் (வயது 26), சவரிமுத்து பிரதீபன் (வயது 26), கார்மேகம் கமலேஸ்வரன் (வயது 32) ஆகியோர் கொல்லப்பட்டவர்களில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஏனையோரின் பெயர் விபரம் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. (ந-5)

## நேற்றும் 450...

மேற்கொள்ளப்பட்டு வரும் இக் கப்பல் சேவை நடவடிக்கையின் மூலம் இது வரை 15 தடவைகள் நோயாளர்கள் புது மாத்தளனிலிருந்து திருகோணமலை மற்றும் புல்மோட்டைப் பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

(ந-14)

## இரணைப்பாலையில்...

படையினர் கைப்பற்றியுள்ளார்கள் எனவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.


இரணைப்பாலைப் பிரதேசத்தில் படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டு விடுதலைப் புலிகளின் பிரதேசத்திற்குள் படையினர் முன்னேறியுள்ளார்கள் என்றும் பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.

இதேவேளை வவுனியா-மன்னார் வீதியில் பாலிக்குளம் பகுதியில் நேற்றுப் பிற்பகல் வீதிச் சுற்றுக் காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரைக் கண்ட விடுதலைப் புலிகளின் உறுப்பினர் ஒருவர் தற்கொலைக் குண்டு ஒன்றை வெடிக்க வைத்து உயிரிழந்துள்ளார் என வவுனியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்புப் பகுதியில் படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய முறியடிப்புத் தாக்குதலின்போது படையினரின் கவச வாகனம் தாக்கியழிக்கப் பட்டுள்ளதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ந-5,14)

## மரண அறிவித்தல்

### சந்திரசேகரம் குமரகுரு



கொட்டடியை பிறப்பிடமாகவும் ஆனைப்பந்தியை வாழ்விடமாகவும் கொண்ட சந்திரசேகரம் குமரகுரு (A.O.G சபை, யாழ்ப்பாணம்) 28.03.2009 நேற்று சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திரசேகரம் கண்மணிப்பிள்ளை ஆகியோரின் கனிஷ்ட புத்திரனும் பொன்னம்பலம் செல்லம்மாவின் கனிஷ்ட மருமகனும் அமரர் கவாஸ்கரின் அருமைத் தந்தையும் சூரியபகவதியின் அன்புக் கணவரும் அமரர் ஈஸ்வரி மற்றும் அம்பிகாவதி, ஜெயலட்சுமி பாலதேவி, தவராசா,சேமசேகரம் (R.M.P), கமலவேணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் அமரர்கள் நடேசன், இராசரெத்தினம் மற்றும் சந்திரசேகரம் (R.M.P) சரோஜினி, இந்திராணி ஆகியோரின் மைத்துனரும் கைலாயபிள்ளை, சொர்ணலிங்கம், அன்னலட்சுமி, தாட்சாயினி, சகுந்தலாதேவி ஆகியோரின் சகலனும் அமரர்கள் ஐயாத்துரை, ஞானப்பிரகாசம், பாலசுப்பிரமணியம், ரதசேகரம் மற்றும் புவனேஸ்வரி, இந்திராதேவி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று 29.03.2009 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று கொட்டடி சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

288,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். T.P. 021 222 4383

தகவல்:
மனைவி கு.சூரியா

(2463)



புதுமாத்தளன் பகுதியிலிருந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வரும் மக்கள். (படம்: ரொய்ட்டர்)

## நோர்வேயின் ஏற்பாட்டில்...

களுக்கான பிரதி ஆணையாளர் ஜோன் ஹோம்ஸுக்கும் இடையில் சந்திப்பை ஏற்படுத்த நோர்வே ஒத்துழைப்பு வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் ஆயுத விவகாரப் பொறுப்பாளர் குமார் பத்மநாதனுக்கும் ஜோன் ஹோம்ஸுக்கும் இடையில் சந்திப்பு நடைபெற்றுள்ளதாக குற்றஞ்சாட்டியுள்ள விமல் வீரவன்ச, ஆயுத விநியோகஸ்தர் ஒருவருடன் பேச்சுவார்த்தை நடத்தியதன் மூலம் ஐக்கிய நாடுகள் அமைப்பு பாரிய குற்றச் செயலொன்றை மேற்கொண்டுள்ளது.

நோர்வே அரசாங்கம் இலங்கையின் இறையாண்மைக்கு குந்தகம் ஏற்படும் வகையில் பல்வேறு சட்ட விரோத செயல்களில் ஈடுபட்டுள்ளது. எனவே உடனடியாகவே நோர்வேயுடனான இராஜதந்திர உறவுகளை துண்டிக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டு சரணடைந்தால் நாளைய தினமே யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர முடியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்துக்கள் பிரபாகரனின் குரலாகவே ஒலித்து வருவதாகவும் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். (ந-5)

## யாழ்.குடாநாட்டில்...

காங்கிரஸ் ஆகிய கட்சிகள் கலந்து கொண்டிருந்தன.

யாழ். குடாநாட்டில் வாழ்ந்து வரும் மக்களின் சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதைத் தாம் ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறியதாகவும் இதற்கு விரைவில் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களை நடத்த நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி உறுதிமொழி வழங்கியதாகவும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவருமான ஆனந்த சங்கரி தெரிவித்தார்.

எனினும் யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவதற்கான கால எல்லைகள் குறித்து ஜனாதிபதி எதுவும் கூறவில்லையெனவும் சங்கரி கூறினார்.

கடந்த வியாழக்கிழமை அலரி மாளிகையில் நடைபெற்ற சந்திப்பில் கலந்து கொள்ளுமாறு தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதும் கூட்டமைப்பினர் அதனை நிராகரித்திருந்தனர்.

(ந-5)

## வன்னிப் போர்க் களத்தில்...

டெல்லி யில் செய்தியாளர்களை சந்தித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வாரம் தான் வவுனியாவுக்கு சென்று வந்ததாகவும் சர்வதேச அளவில் போர் காலத்தில் கையாள வேண்டிய மனித உரிமை விதிகளை இருதரப்பினருமே மீறிவருவதாகவும் கூறினார்.

போர் பகுதியில் 70 ஆயிரம் பேர் உள்ளதாக அரசு கூறிவரும் நிலையில் சுமார் 2 லட்சத்துக்கும் அதிகமான தமிழர்கள் போர் பகுதியில் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

அங்கு உணவு, தண்ணீர் போன்ற அத்தியாவசிய தேவைகள் போதிய அளவு இல்லை. போர் முனையில் இருக்கும் நிலைமை மிக மோசமாக உள்ளது. அங்குள்ள அகதி முகாமில் தங்கி உள்ளவர்களுக்கு அடிப்படை வசதிகள் கிடைக்காத நிலை உள்ளது.

உணவு,உடை போன்ற விடயங்கள் அவர்களைச் சென்றடைவதிலும் பாதுகாப்பிலும் சிறப்பு மையம் தேவைப்படுகிறது.

தற்காலிக மையங்களில் தங்கியிருப்போர் மிகவும் நெருக்கடியில் உள்ளனர். பாதுகாப்பு பகுதியில் குண்டு வீச்சு நடத்தப்பட்டு நூற்றுக் கணக்கானோர் பலியாகி வருகின்றனர். இலங்கையில் போரை நிறுத்த சர்வதேச நாடுகள் முயற்சி மேற் கொள்வது எஞ்சிய மக்களைகாப் பாற்ற உதவும் என்றும் அவர் கூறி னார்.

இலங்கையின் போர்பகுதிகளிலிருந்து வெளியேறிவரும் பொதுமக்களை தங்க வைக்க வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள இடைத்தங்கல் முகாம்களில் அளவுக்கு அதிகமான மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ளதால் அங்கு பாரிய இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

அதேநேரத்தில் சுகாதார நிலைமையும் கடினமாகவே உள்ளது. அரசாங்கம் தற்பொழுது அளித்து வரும் உணவை இன்னமும் அதிகரித்து வழங்க வேண்டும்.

சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் போர் பகுதியிலிருந்து பொதுமக்களை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் நிலையில் அரசு அதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.போர்ப்பகுதியில் பட்டினியும் உணவுப்பற்றாக்குறையும் கடுமையாக இருப்பதாக செய்திகள் வந்துள்ளன.

போர்ப்பகுதியிலிருந்து வெளியேறிவரும் மக்கள் சோதனைச் சாவடிகளில் பரிசோதனைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். தற்பொழுது அந்த பணியை இலங்கை அரச அதிகாரிகள் கவனித்து வருகிறார்கள். அதை ஐ.நா. மனித உரிமை அமைப்பு உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்களின் பொறுப்பில் விட வேண்டும் என்று அரசை வலியுறுத்தியுள்ளோம்.

போர் அற்ற பகுதிகள் என அறிவிக்கப் பட்ட பிராந்தியத்திலும் ஷெல் தாக்குதல் நடத்தப்படுகிறது. அதில் பொதுமக்களும் தொண்டு அமைப்பு உறுப்பினர்களும் உயிர் இழக்கின்றமை கவலை தருகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ந-3,5,14)

வசீகர தோற்றத்திற்கு
சந்தனாலேப
(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)
வெண்சந்தனம், மரமஞ்சள், குங்குமப் பட்டை, கஸ்தூரி மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔடதங்களின் கலவை, தேமல்,முகப்பரு,தழும்புகள்,படர்தாமரை,கண்ணைச் சுற்றி கருவளையம், சருமம் வரட்சியடைதலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன், எழில்மிகு வசீகர முக அழகை தரும். உதடு,வாய்,பாதவெடிப்பு, சருமம் சுருங்குதல், பிளவு படுதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும். சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன்மூலம் பிளேட் விசத்தை நீக்கி, சருமத்தை சவரம்செய்வதை இலகுவாக்கும். எடுப்பான கம்பீரத்தோற்றத் தரும்.

சந்தனாலேப
யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
"சிவா நறுமணப்பூங்கா"
288,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சகல பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்)
(MANUFACTURED BY
SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS
VEYANGODA SRILANKA AYY PRO NO REG NO A/L 250

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.03.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.